# சாளரம்

செப்ரெம்பர் 1991 விலை : 14 ரூபா





உயர்திரு. விபுலானந்தர் அவர்களின் இரு தோற்றங்கள்

ஒன்று இளமைத் தோற்றம். மற்றது அவர் துறவுக்கோலம் பூணமுன் போர்க்கோலம் பூண்ட தோற்றம்.

இளையோர் திங்கள் இதழ்

## உள்ளே.....

**சாளரம்**

*தொடர்பு முகவரிகள்*


அலுவலகம்:-

**சாளரம்**
வேம்படி வீதி
யாழ்ப்பாணம்.

அ. முருகேசு
*றோ. க. த. க. பாடசாலை*
*புதுக்குடியிருப்பு*

அ. கௌரிகாந்தன்
*கிருஷ்ணபுரம்,*
*கிளிநொச்சி.*



- ஆங்கிலேயர் ஒரு மொழி வழிக் குழு
- பெண் குழந்தைகளை கண்போல் பேணுங்கள்
- போரும் பாடசாலையும்
- தற்போதைய நெருக்கடிகளும் மாற்று சிகிச்சை முறைகளும்
- ஔவையார்
- சிறுகதை
- ஆசிரிய தலையங்கம்
- மாணவர் செய்தவை
- விளையாட்டும் ஆரோக்கியமும்
- நிலா முற்றம்
- முதலாவது அணுகுண்டு அர்த்தமற்ற மனித அழிப்பு
- குறுக்கெழுத்துப் போட்டி
- அரும்புகள்

❀ விபுலானந்தர் கட்டுரை வரிசை

# ஆங்கிலேயர் ஒரு மொழி வழிக் குழு

*1892 - 1947* க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மயில்வாகனம் என்னும் இயற்பெயரைக் கொண்ட விபுலானந்தர் தமிழ் மொழிப்பற்றும் தமிழ் இனப்பற்றும் மிகுந்த பேரறிஞராவார்.

'தமிழ் இனம் ஒரு மொழிவழிக் குழுவல்ல. அதாவது, ஒரே மொழியைப் பேசும் காரணத்தால் ஓர் இனமாக கருதப்படும் ஒரு குழுவல்ல. தமிழன் ஓர் இன-மொழிக் குழுவினன்.

இவர் வாழ்ந்த காலம் பிரித்தானியரின் செல்வாக்கு தெற்காசியா எங்கும் கொடிகட்டிப் பறந்த காலமாகும். அப்போது ஆங்கில மொழி மோகம் படித்தவர்களினதும், மேட்டுக் குடியினரதும் (உயர் வர்க்கங்கள்) சிந்தையில் நிறைந்திருந்தது. ஆங்கில மொழியிலும், ஆங்கில இலக்கியத்திலும், ஆங்கிலேயர்களினது வரலாற்றிலும் சிறந்தஞானம் பெற்ற உயர்திரு விபுலானந்தர் ஒரு வரலாற்று வழிவந்த சமூக குழு என்ற முறையில் தமிழனுக்கும் ஆங்கிலேயனுக்கும் இடையே இருந்த வேறுபாட்டை வரலாற்று ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டுகிறார். ஆங்கில வாணி என்ற தனது கட்டுரைமூலம் இதை நிறைவேற்றுகிறார்.

இக்கட்டுரை விருப்பு வெறுப்பின்றி ஆங்கில இலக்கியங்களை ஆராய்ச்சி செய்கின்றது. தமது தமிழ்ப் பற்றைப் பிரகடனப் படுத்துவதற்காகவும், தம்மைப் பிரபல்யப்படுத்திக் கொள்வதற்காகவும் பிற மொழிகளின் மேல் வெறுப்பை அள்ளிக் கொட்டும் தரங்கெட்ட 'அறிவாளி'களின் வகையைச் சேர்ந்தவரல்ல இவர். மாறாக பிற மொழிகளின் நிறைவான அம்சங்களை மனமார புகழும் உயர் பண்புடையவராகவும் இருந்தார். 'தமிழ் மக்கள் கலைமகளாகிய சரசுவதியை வாணி என்று அழைப்பதால் ஆங்கில இலக்கியத்திற்கு ஆங்கிலவாணி என நாமமிட்டார். ஆங்கிலத்தையும் மதித்தார்.

'பிரித்தானியா என இன்று அழைக்கப்படும் தீவு இரு பெரும் தீவக நிலப்பரப்புகளைக் கொண்டது. மேற் திசையில் உள்ள நிலப்பரப்பு ஐரிஷ் என அழைக்கப்படும். தென் திசையில் உள்ள நிலப்பரப்பின் வடபாலிலே ஒருபகுதி ஸ்காட்லாந்து எனவும், மேற்றிசையில் ஒரு பகுதி வேல்ஸ் எனவும், எஞ்சிய பெரும்பாகம் இங்கிலாந்து (அங்கிளத்தரை) எனவும் அழைக்கப்படுகிறது. ('அங்கிளர்' என்னும் மொழியே திரிந்து ஆங்கிளர், ஆங்கிலர், இங்கிலீஷ் எனவாயிற்று.)

> 'தமிழ் இனம் ஒரு மொழிவழிக் குழுவல்ல. அதாவது, ஒரே மொழியைப் பேசும் காரணத்தால் ஓர் இனமாக கருதப்படும் ஒரு குழுவல்ல. தமிழன் ஓர் இன-மொழிக் குழுவினன்.'

மேற்கூறிய நான்கு தேசங்களிலும் வாழும் மக்கள் வெவ்வேறு இனத்தினர். ஸ்கொட்ஸ், உவெல்ஷ், இங்கிலீஷ், ஐரிஷ் என்னும் நான்கு இனத்தினராகும். ஆதியிலே வழங்கிய மொழிகளும் நால்வேறு ஆவன. பூர்வீகத்தில் இவர்கள் கைக்கொண்ட சமயமும் வேறு ஆங்கிலர் வருவதற்குமுன் பிரித்தானியாவின் கீழ், தென் பாகங்களில் வாழ்ந்த மக்கள் பிரித்தன் என்னும் இனத்தினர். இவர்கள் வெளிநாட்டுத் தொடர்பின்றி நாகரிகம் குறைந்தவராய் இருந்தனர்.

கி. பி 43 ஆம் ஆண்டிலே பிரித்தானியாவின் தென் கீழ்ப்பாகங்கள் உரோமரது ஆளுகைக்குட்பட்டன. ஸ்கொட்லாந்தை உரோமர் கைப்பற்றவில்லை. நானூறு ஆண்டுகளுக்கு உரோமர் ஆங்கில நாட்டை ஆண்டனர். உரோமர் வெளியேறிய பின்னர் ஸ்கொட்ஸ் தெற்கே வந்து பிரித்தானியரைத் துன்புறுத்தினர்.

ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே, ஜேர்மனி ஸ்காண்டிநேவியா (இக்காலத்து நோர்வே, சுவீடன்) நாடுகளில் இருந்து கடல் கடந்து சென்ற சாக்சனியரும், அங்கிளரும் பிரித்தானியாவின் கீழ்த் திசையில் சில பகுதிகளைப் பற்றி ஆளுகை புரிந்தனர். அதைத் தொடர்ந்து தேன்மார்க் நாட்டினராகிய தேனர் தம்மாணை செலுத்தினர். இவ்வாறு வந்து குடியேறியோர் பலரினது கலப்பினாலேயே ஆங்கில மக்கள் தோன்றினர். வைக்கின்ஸ் என்னும் ஆங்கில முன்னோர் கடற்பயணத்தில் திறன் மிக்க போர்த் தொழில் பிரியராய் இருந்தனர். பண்டைத் தமிழ் நாட்டில் இருந்த குறுநில மன்னர்போல் பூர்வ ஆங்கிலரும் ஒருவரோடொருவர் போர்புரிந்து கொண்டிருந்தனர்.

கிறிஸ்தவசமயம் புகுதற்கு முற்பட்ட காலத்திலே, ஆங்கிளசாக்ஸன் என்னும் பூர்வ ஆங்கிலத்திலே பெயவுல் (Beowulf) எனப் பெயரிய

காப்பியமொன்று இயற்றப் பட்டது. கிறிஸ்தவ சமயம் புகுந்த பின் பழைய போர்த்தொழிலைக் கைவிட்டு மக்கள் கட்டுக்கடங்கி வாழத் தொடங்கினார்கள்.

உயர்திரு விபுலானந்தரின் மேற் கூறிய கூற்றுக்களின்படி கி.பி 9 ம் 10 ம் நூற்றாண்டளவிலேயே ஆங்கிலேயர் தோற்றம் பெறுகின்றனர்.

கி பி. 1066 ஆம் ஆண்டில் பிரெஞ்சு தேசத்தின் வட பாலியுள்ள நோர்மாண்டி நாட்டுச் சிற்றரசன் ஆங்கில நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அந் நாட்டு முடி மன்னனாகினான். இம் மன்னனோடு நோர்மானிய, பிரெஞ்சியர் அநேகர் ஆங்கில நாட்டில் குடியேறினர். ஆங்கில மொழியும் நோர்மானிய, பிரெஞ்சுப்பதங்களை ஏற்று வழங்கத் தொடங்கியது. அதனாற் பாஷையானது வளமெய்தியது. முன் நூற்றாண்டின் எல்லையிலே நோர்மன் பிராஞ்சியர் வேறுபாடின்றிக் கலந்து ஆங்கிலரோடு ஒன்றாயினர்.

கி. பி. 1340 - 1400 ம் ஆண்டில் வாழ்ந்த சாசர் என்னும் கவியே ஆங்கிலக்கவிதை வானின் முதலாவது கவிஞனாகும்.

இவ்விதம் கூறிய உயர்திரு விபுலானந்தர் பிரித்தானிய நாகரிகத்தின் வளர்ச்சிக்கான காரணங்களை சுருக்கமாக கூறி ஆங்கில இலக்கியங்கள் பற்றிய ஆய்வினுள் புகுகிறார்.

சேக்ஷ்பியர், மில்றன், கீத்ஸ், ஏழைகள் கவிஞனான ஷெல்லி, தெனிசன், றொபேட் பிறௌணிங் ஆகிய ஆங்கில கவிஞர்களது நூல்களை அறிமுகஞ் செய்கிறார். அவற்றின் இலக்கிய நயத்தை சுவைக்க வழிகாட்டுகிறார். தான் பெற்ற இன்பத்தை வாசகருடனும் பகிர்ந்து கொள்கிறார்,

அதே கட்டுரையின் வேறோர் இடத்தில் அவர் பின்வரும் விடயத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலே ஆங்கில மொழி வழங்கிய மக்களின் தொகை ஐம்பது லட்சமாகும். அரைக்கோடி. இந் நாளில் இலங்கைத் தீவில் உள்ள சனத் தொகையிலும் குறைந்த எண்ணிக்கையுள்ள மக்களே அந் நாளில் ஆங்கில நாட்டில் வாழ்ந்து ஆங்கில மொழியை வழங்கினார்கள். முந்நூறாண்டு எல்லையினுள்ளே ஆங்கில மொழியைத் தமது தாய் மொழியாக வழங்குவோர் தொகை நாற்பது மடங்கு பெருகிவிட்டது. பிரித்தானியாவில் இந்நாளில்வாழும் நாலரைக்கோடி மக்களும், அமெரிக்க ஐக்கிய மாகாணம், கனடா, அவுஸ்திரேலியா, தென்ஆபிரிக்கா முதலிய குடியேற்ற நாடுகளில் வாழ்வோருமாக இருபது கோடி மக்கள் ஆங்கில மொழியை கொண்டுள்ளார்கள், அஃதன்றியும் ஆங்கிலரது ஆணைசெல்லும் இந்தியா முதலிய நாடுகளிலும், பிற நாடுகளிலும், ஆங்கில மொழியறிவு உள்ளோர் தொகை இன்னும் பலகோடியாகும்.

இத்தனைக்கும் ஆங்கிலமொழி அனைத்து மொழிகளிலும் மிக உயர்வான மொழி என்று கூறுவதற்கில்லை. அது பல குறைபாடுகள் கொண்டது என்பதை மொழியியல் அறிஞர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள் உயர்திரு விபுலானந்தர் கூட மேற்றிசைச் செல்வம் என்ற தமது நூலிற்கான முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார். ''...... ஆங்கிலமோ இலக்கண வரம்பில்லாத முரட்டு மொழி; பத்தாண்டு பயிலினும், கருதிய பொருளைத் தெளிவுற உரைக்குஞ் சொல்வன்மையைப் பெறுவது மிகவும் அரிதாகும்.''

பல மொழி இனவழிக் குழுக்களினது ஒன்று கலப்பால் தோற்றமுற்ற ஆங்கில மொழிவழிக் குழுவினர் எண்ணிக்கையிலும், நாகரிகத்திலும் இவ்வளவு துரிதமாக வளர்ச்சி பெற்றதும் இவ் வளர்ச்சியின் பெறுபேறுகள் உலகத்தார்க்கு ஒரு முன்னுதாரணமாக இருப்பதும் ஆராயப்பட வேண்டிய ஒன்றேயாகும்.

இங்கு எமது விடயம் ஆங்கிலேயரை முதலில் ஒரு மொழிவழிக் குழுவாக இனங்கண்டு கொள்வதேயாகும்.

— வாமணன்

## காலத்தால் முந்திய தமிழ் நிகண்டு

''ஆங்கில மொழியிலே நிகண்டு நூல் ஒன்றினை யாத்தமைத்த றோஜெட் (Roget) என்பார் அத்தகைய நூல் பிறமொழி யொன்றிலும் இலதென முதற் பதிப்பிலே கூறினார். இரண்டாம் பதிப்பு முகவுரையில் அமரசிங்கர் என்பார் பற்றிய நிகண்டு நூலொன்று வட மொழியிலே உளதெனக் குறிப்பிட்டார். பிங்கலம், திவாகரம் முதலிய நிகண்டு நூல்கள் தமிழ் மொழியிலுள வெனும் உண்மையினை அவர் அறிந்திலர், தமிழராகிய நாம் அறிவித்தில மாதலின்.''

உயர்திரு. விபுலானந்தர்

# பெண் குழந்தைகளை கண்போல் பேணுங்கள்

வளர்ந்த நாடுகளில் பிறக்கும் குழந்தைகளில் 600 க்கு ஒருவர் வீதம் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பிறக்கின்றன. இம் மாதிரி மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளை மரபியலில் (Genitics) - டவுன்ஸ் சின்ட்ரோம்' குழந்தைகள் (Downs Syndrome Babies) எனப் பிரிக்கிறார்கள். இது எப்படி எனக் கொஞ்சம் அறிவியலைப் பார்த்துவிட்டு விஷயத்துக்கு வருவோம்!

கட்டிடங்களை கட்டுவதற்கு செங்கற்களை உபயோகிக்கின்றோம். அதைப் போல் உலகில் உள்ள உயிரினங்கள் யாவும் செல் (Cell) எனப்படும் மூலப்பொருளால் ஆனவை. ஒவ்வோர் உயிரினமும் தனக்கே உரித்தான குணங்களை எவ்வித மாறுபாடுமின்றி பல்லாயிரக்கணக்கான வருடங்களாக வெளிப்படுத்தி வருகின்றது. இதன் மூல காரணம் டி. என். ஏ (டி. ஆச்சிரைபோ நியூக்ளிக் ஆசிட்) என்னும் ரசாயனப் பொருளாகும். சுருள் ஏணியைப் போன்று இருக்கும் இந்த ரசாயனப் புரதச் சத்துடன் சேர்ந்து 'குரோமோ சோம்' என்னும் செல் உறுப்பாக மாறி ஒவ்வொரு செல்லின் உட்கருவிலும் உள்ளது. ஒரே மாதிரியான உயிரினங்களில் இந்த 'குரோமோசோம்'களின் எண்ணிக்கை ஒன்றாகவே இருக்கும். மனிதர்களைப் பொறுத்தவரை 46 'குரோமோசோம்கள்' 23 சோடிகளாக உள்ளன இதில் 22 ஜோடிகள் மனித உடலின் பல்வேறு இயக்கங்களுக்குக் காரணமாகவும், ஒரு சோடி மட்டும் ஆண் பெண் மாறுபாட்டை நிச்சயிக்கும் தன்மை உடையதாகவும் உள்ளது. இத்தகைய 'குரோமோ சோம்'களின் தன்மையும், எண்ணிக்கையும் மாறாமல் உயிரினங்களில் சந்ததிகளைச் சென்று அடைவது இயற்கையின் மாபெரும் அதிசயங்களில் ஒன்றாகக் கொள்ளலாம்.

இத்தகைய குரோமோ சோம்களின் தன்மையும், எண்ணிக்கையும் மாறாமல் உயிரினங்களில் சந்ததிகளைச் சென்றடைவது இயற்கையின் மாபெரும் அதிசயங்களில் ஒன்றாகும் தன்மையிலோ, எண்ணிக்கையிலோ மாறுதல்கள் ஏற்பட்டால் அது மனிதர்களைப் பல வழிகளில் பாதிக்கும்

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தக் 'குரோமோசோம்'களில் ஏற்படும் எந்த விதமான சிறு மாற்றமும் முதலில் பாதிப்பது மூளை வளர்ச்சியைத்தான். மேலே கூறிய 'டவுன்ஸ்சின்ட்ரோம்' என்னும் மரபு வழிக்கோளாறு ஒரு குரோமோசோம்' அதிகமாக இருப்பதால் ஏற்படுகின்றது

**பூச்சிக் கொல்லிகள் பற்றி:**

தற்போது விவசாயத்தில் உபயோகிக்கப்படும் பூச்சிக் கொல்லிகள் முதன்முதலில் 1936 ல் கண்டு பிடிக்கப்பட்டது அதன் பின்பே விவசாய உற்பத்தி உபயோகத்துக்கு கொண்டுவரப்பட்டன. முதலில் கண்டு பிடிக்கப் பட்டவை ''ஆர்கனோ குளோரின்'' என்னும் முதல் சந்ததி பூச்சிக் கொல்லிகள். இதில் வளரும் நாடுகளில் இன்னமும் உபயோகித்து வரும் டி. டி. ரி (D. D. T.) பி எச். சி போன்ற மருந்துவகைகள் 20 ஆண்டுகளுக்கு முன்னரேயே வளர்ந்த நாடுகளில் தடை செய்யப்பட்டன வையாகும்.

இவை உபயோகிக்கப்பட்ட இடங்களிலேயே அழியாமல் பல ஆண்டுகள் இருக்கும் தனித்தன்மை வாய்ந்தது. இதில் D D. T இயற்கை உணவுச் சங்கிலியில் ஓர் அங்கமாக மாறி தற்போது உலகிலுள்ள அனைத்து உயிரிகளின் உடலிலும் மிகுந்த அபாயகரமான நிலையில் உள்ளது. இதனால் இயற்கை உயிரினங்களில் பல ஒட்டு

**"பெண்கள் 30 வயதுக்குமேல் தாய்மைப்பேறு அடையும்போது அவர்கள் மரபுவழிக் கோளாறுகளுடன் கூடிய குழந்தைகளைப் பெறும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது.**

**மேற்கூறிய காரணங்களினால் பெண்குழந்தைகள் பேணிக் காக்கப்படுதல் சமுதாயத்தின் தலையாய கடமைகளில் ஒன்றாகிறது."**

மொத்தமான அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன. மனிதனும் இதனுள் அடங்குவான்.

இதற்குப்பின் வந்த இரண்டாவது சந்ததி பூச்சிக் கொல்லிகள் ஆர்கனோ பொஸ்பேட் என்பவையாகும். பாரதியோன், மாலதியோன் போன்றவை இவ் வகையைச் சார்ந்தனவாகும். இவை 1945 ன் பின்பே பாவனைக்கு வந்தன இரண்டாவது உலகப்போரின்போது மேலை நாடுகளின் இராணுவ ஆராய்ச்சி சாலைகளில் மனிதர்களைக் கொல்லும் சக்தி வாய்ந்த ரசாயன ஆயுதங்கள் ஆராய்ச்சியின் போது இவை தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டவை. இவை இயற்கையில் சில வாரங்களே நிலைத்து நிற்கும் தன்மை வாய்ந்தவை. ஆனாலும் இப் பூச்சிக் கொல்லிகளில் பல குரோமோசோம்களின் எண்ணிக்கையையும் தன்மையையும் மாற்றவல்லவை.

### மனித உணவிலும் பூச்சிக் கொல்லிகள்

ஒரு சாதாரண மனிதனின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவு சராசரி 2,200 காலரி கொடுக்க வல்லதாக இருக்க வேண்டும். இது சரிவிகித உணவு (Balanced Diet) என அழைக்கப்படுகின்றது. இந்த சரிவிகித இந்திய உணவில் ½ முதல் 1 மில்லி கிராம் அளவுக்கு பூச்சிக் கொல்லி மருந்துகளும் கலந்துள்ளது. இது ஓர் அமெரிக்கரோ அல்லது ஆங்கிலேயரோ உண்ணும் உணவில் இருப்பதைக் காட்டிலும் 40முதல் 50 மடங்கு அதிக அளவாகும். இந்த அளவு உலக சுகாதார நிறுவனத்தால் -WHO- விதிக்கப்பட்டுள்ள அபாய அளவை ஒத்ததாகும். இதனால் நாம் மட்டுமல்ல நமது சந்ததியினரும் சேர்த்துப் பாதிக்கப்படுகிறார்கள்.

குழந்தைகளின் உணவான தாய்ப்பாலும், அதற்கு இணையாக நவீன மாதர்களால் விரும்பி வாங்கப்படும் குழந்தை உணவுகளும் இந்த பூச்சி மருந்துகளின் கலவையைத் தன்னுள் ஒரு அங்கமாகக் கொண்டுள்ளன. பிறந்த நாளில் இருந்தே மனித உணவில் கலக்கப்படும் இந்த நஞ்சு ஒவ்வொரு உடலிலும் உள்ளகொழுப்பு இழையங்களில் சேர்த்துவைக்கப்பட்டு பல பின் விளைவுகளை ஏற்படுத்த காரணமாக உள்ளது.

### பெண் குழந்தையை விசேடமாகப் பேணுங்கள்

மனித குலத்தைப் பொறுத்தவரை பெண் குழந்தை பிறந்த அன்றே அதன் உடலில் அதன் ஆயுட் காலத்தில் உற்பத்தியாகும் அனைத்து முட்டைகளும் (சுமார் 400) தயார் நிலையில் வைக்கப்பட்டு இருக்கும். ஆனால் இவை பெண் பருவம் அடையும் வரை ஒரு விதமான உறக்க நிலையில் இருக்கும். பெண் பருவம் அடைந்தது முதல் மாதம் ஒரு முட்டை வீதம் சுமார் 35 ஆண்டுகளுக்கு அவை வெளிவரும். அவள் உணவில் கலக்கும் பூச்சி மருந்துகள் அவள்பிறந்த நாளில் இருந்தே இம் முட்டைகளில் இருக்கும் மரபுவழி மூலக்கூறான டி. என். ஏ யைத் தாக்கி அதில் பலமாறுபாடுகளை ஏற்படுத்தி பல மரபுவழிக் கோளாறுகளுடன் குழந்தைகள் பிறக்க காரணமாகிறது. இதனால் பெண்கள் 30 வயதுக்கு மேல் தாய்மைப் பேறு அடையும்போது அவர்கள் மரபு வழிக் கோளாறுகளுடன் கூடிய குழந்தைகளைப் பெறும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

மேற்கூறிய காரணங்களினால் பெண்குழந்தைகள் பேணிக் காக்கப் படுதல் சமுதாயத்தின் தலையாய கடமைகளில் ஒன்றாகிறது.

ஆண்குழந்தைகள் இவ்விதமான சுற்றுச் சூழல் பாதிப்புக்கு அதிகமாக உள்ளாவதில்லை. ஏனெனில் ஆண்களுக்கு விந்து அணுக்கள் பருவமடைந்தவுடன்தான் உற்பத்திசெய்யப்படுகின்றது.

### செய்யவேண்டியவை

முதலாவதாக, எம்மில் பலருக்கு உணவில் பூச்சிக் கொல்லிகளின் கலப்பு பற்றிய விடயம் பற்றிய எச்சரிக்கையே இல்லை. நமது மக்களிடையே இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் இவர்களின் தெரிநிலையை அதிகரித்தலும் ஒரு கடமையாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

இரண்டாவதாக; பெண் குழந்தைகளின் உணவு விடயத்தில் பெற்றோர்களும் சமுகமும் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். காய்கறிகள், தானியங்கள், பருப்பு வகைகள் ஆகியன நன்றாக தண்ணீர் விட்டு கழுவப்பட வேண்டும். தோலுடன் சாப்பிடும் பழங்கள் முக்கியமாக நீக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக; பூச்சிக் கொல்லி உபயோகம் கட்டுப்படுத்தப் பட வேண்டும். வளர்ச்சி பெற்ற நாடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்னரே தமது நாட்டில் சுகாதார தீங்கு என்ற காரணங்காட்டி தடை செய்யப்பட்ட பூச்சிக் கொல்லிகள் இன்னமும் நமது நாடுகளில் பாவனையில் உள்ளன. இந் நிலை மாற வேண்டும். அவை இங்கும் தடை செய்யப்பட வேண்டும்.

பல தரக்கட்டுப்பாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அவை சந்தையில் உள்ள உணவுப் பொருட்களில் கலந்துள்ள பூச்சிக் கொல்லிகளின் அளவை அடிக்கடி கணக்கிட வேண்டும். அதிகளவு பூச்சிக் கொல்லிகள் கலந்துள்ள விற்பனைப் பண்டங்கள் தடை செய்யப்பட வேண்டும்.

கடைசியாக தமிழ் அறிவியலாளர்களுக்கு ஒரு வேண்டுகோள். அறிவியல் வளர்ச்சியால் ஏற்படும் நன்மை தீமைகளையும், சுற்றுச் சூழல் பாதுகாப்பின் அவசியத்தையும் பாமர மக்களிடம் எடுத்துக் கூறுவதை உங்கள் குறிக்கோள்களாக கொள்ளுங்கள். நமது எதிர்காலச் சந்ததியினரின் வளமான வாழ்வை உறுதி செய்யும் நோக்கங்களைக் கொண்ட பட்டிமன்றங்களையும் வழக்காடு மன்றங்களையும் நடத்தும் முயற்சியில் ஈடுபடுங்கள். புதுக் கவிதைகளிலும் அறிவியல் மணம் வீசட்டும். தமிழின் தன்மையும் தரமும் இவ் வகையில் உயரட்டும்.

— தொடர்பு உதவி

வி மஹாலிங்கம்

(இந்திய சுற்றுச்சூழல் மாறுபாட்டுக்கழக அங்கத்தவர்)

# வீட்டுவேலை என்னும் சுரண்டல்

குடும்ப அமைப்பின் பொருளாதாரத்தை ஆய்வு செய்த மார்க்சிய பெண்நிலைவாதிகள், குடும்பம் பற்றிய பல புதிய கண்டுபிடிப்புகளையும், குடும்பத்திற்கான புதிய வரையறைகளையும் செய்துள்ளனர். குடும்ப அமைப்புக்குள் பெண்கள் நிறைய வீட்டு வேலை செய்பவர்களாக உள்ளார்கள். ஆனால் இந்த வீட்டுவேலையின் சமூக மதிப்பு அங்கீகரிக்கப்படாத தொன்றாகவே உள்ளது. இது குடும்ப அமைப்பினுள் மறைக்கப்பட்டுள்ளது. மாக்சிய பெண்நிலைவாதிகள் இம்மதிப்பீட்டை கண்டறிந்துள்ளனர். இம் மதிப்பீட்டின் அடிப்படையிலும் நுகரும் முறைகளின் அடிப்படையிலும் குடும்பத்துக்கும் சமூக உற்பத்திக்கும் உள்ள உறவுகளை இவர்கள் ஆராய்ந்துள்ளனர். இங்கு, பெண்கள் மாடாகச் செய்துவரும் வீட்டுவேலையை உழைப்பின் மதிப்பீட்டின் அடிப்படையில் பெண்நிலைவாதிகள் புரிந்து கொள்ள முயன்றுள்ளனர். இதனால் பெண்கள் செய்துவரும் வீட்டுவேலையின் சமூக பொருளாதார மதிப்பு புதிய முறையில் புரிந்து கொள்ளப்படுகின்றது. பெண்கள் மீதான பிரத்தியேக சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் புரிந்துகொள்ளவும் இவ் வாய்வுகள் பெரிதும் உதவுகின்றன.

பெண்களின் வீட்டுவேலை உழைப்பை எப்படி அர்த்தப்படுத்திக் கொள்வது என்பதுமே ஒரு அரசியல் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. 1986ல் நைரோபி நகரில் நடந்த உலகப் பெண்நிலைவாதிகளின் மாநாட்டில் இப்பிரச்சினை கடுமையான விவாதங்களை ஏற்படுத்தியதில் இருந்து இதன் ஆழம் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

ஒரு சாதாரண குடும்பத்தை ஒரு சிறைக் கூடமாகவே பெண்நிலைவாதிகள் கருதுகின்றனர். அது பெண்ணின் உழைப்பையும் இனவிருத்திக்கான திறனையும் சுரண்டுகிறது. மேலும் அவளைக் குடும்பவாழ்க்கையின் சட்டதிட்டங்களுக்குள் மாட்டிவைத்தும் ஆணாதிக்க மனப்பான்மையை பொதுவாக வளர்த்தும் வருகின்றது. இதனால் தனது அடிமைத்தனத்துக்குத் தானே துணைபோக வேண்டிய நிலைமை ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு பெண்ணும் சிறுமி, மனைவி, தாய் என்று ஏற்கனவே கட்டியமைக்கப்பட்ட வடிவங்களில் மட்டுமே இக்குடும்ப அமைப்புக்குள் செயலாற்ற முடியும்.

அபர்ணா மகந்தா
(மாக்ஸியமும் பெண்நிலைவாதமும்)

உருவகம்

# அழிப்பும் காப்பும்

விரவிப்படர்ந்த தூசி மண்டலமாகப் பிரபஞ்சப் பெருவெளி விரிந்து கிடந்தது. அண்டப் பகுதியிலிருந்து எரி நட்சத்திரமொன்று எங்கோ ஒரு திசையில் சென்று கொண்டிருந்தது. அதன் எதிர்த்திசையில் சுடர் போலும் ஒளிச் சிதறல்கள் பொறிப் பொறியாகச் சிதறிக் கொள்ள ஏதோ ஒரு லக்கினை நோக்கி அது சென்று கொண்டிருந்தது.

புவி ஈர்ப்பு விசைக்கப்பால் மிதந்து கொண்டிருந்த ஆய்வு கூடமொன்றில் எரிநட்சத்திரம் வருவதற்கான சமிக்ஞைகள் தென்பட்டுக் கொண்டன. அந்த ஆய்வு

- வளவை வளவன் -

கூடத்திலிருந்து முற்றிலும் புதிதான ஒலி ஒன்று கிளர்ந்தெழுந்து கொண்டது.

எரிநட்சத்திரத்தின் அக்கினிச் சுடர்கள் அந்த ஆய்வு கூடத்தைத் தாக்கி இருக்கவேண்டும்.

ஒருகணம் அதிர்ந்து செயற்பாட்டை இழக்க வேண்டி ஏற்பட்டபோது தன்னியங்கிக்கணனிப் பொறிகள் அந்தத் தாக்கத்திலிருந்து ஆய்வு கூடத்தை மீட்டெடுத்துக் கொண்டன.

யார் நீ ... என்ன விளையாடுகிறாயா? என்ற பாவனையில் ஆய்வு கூடத்திலிருந்து அடுக்கடுக்கான வினாக்கள் எழுந்தன.

எரிநட்சத்திரம் சிரித்து விட்டுச் சொன்னது நெருப்புடன் விளையாடுகிறாய் வீணாகப் பொசுங்கிப் போவாய் என்று எச்சரித்தது.

ஆய்வுகூடம் அமைதியாகப் பேசியது. ''மனிதர்களைப்பற்றி உனக்குப் புரியாது தானே. பரவாயில்லை, நீயாகவே உன்வழியைமாற்றிக் கொள். இல்லையேல் உன் உருவே அழிக்கப்பட்டுச் சின்னா பின்னப்பட்டு நீண்டகாலமாகத் துணிக்கைகளாகி அண்ட வெளியில் அலையப் போகிறாய்'' என்று.

வரலாறு தெரியாது போலும் உனக்கு. அதுதான் இத்தனை கர்வமாகப் பேசுகிறாய். பூமியில் காலத்துக்குக்காலம் நாங்கள் வருவது வழக்கம். சில பகுதிகளை அழித்துச் சமுத்திரமாக்கி விட்டு சமுத்திரப் பரப்பை தரையாக மாற்றிப் புதிய உயிரினத் தோற்றத்தை உண்டாக்குவது நாம்தான் வரலாறு தெரியா

(தொடர்ச்சி 7 ம் பக்கம் பார்க்க.)

# போரும் பாடசாலையும்

— மாதுங்கன் —

## முன்னுரை

உலகப் போர் ஒரு இடைவேளை யில்லாத் தொடர் நிகழ்ச்சியாகவே உள்ளது. ஏதாவதொரு பகுதியில் போர் நடைபெறாத நாளே யில்லை. ஆனால் குறிப்பிட்ட ஏதாவதொரு நாட்டை எடுத்துக் கொண்டால், அல்லது ஒருபகுதியை எடுத்துக் கொண்டால் அங்குபோர் எந்நாளும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியல்ல. நீண்டகால இடைவேளை விட்டு இடை இடையே நடைபெறும் ஒன்றாகவே உள்ளது. அதுவுங்கூட ஒரு குறுகிய கால நிகழ்வாகவே உள்ளது.

ஆனாலுங்கூட இப்போர் ஆழ்ந்த, நீடித்து நிற்கக் கூடிய வரலாற்றுத் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்து விடுகிறது. வரலாற்றில் மறக்கமுடியாத பல சுவடுகளைப் பதித்துச் செல்கிறது. இது அநேகமான வேளைகளில் வரலாற்றை முன்நோக்கி முடுக்கித் துரத்துகிறது. மிகச் சில சந்தர்ப்பங்களில் வரலாற்றின் இயல்பான வளர்ச்சியைத் தடுத்துச் சிதைக்கின்றது.

மனிதர்களின் ஒரு பகுதியினர் இன்னோர் பகுதியினரைச் சுரண்டுவதும், ஒரு பகுதியினர் இன்னோர் பகுதியினரை அடக்குவதுமே போர் நடைபெறுவதற்கான காரணமாகும். சுரண்டல் அடக்குமுறை ஆகிய இரண்டும் நிலவும் வரை போரும் நிலவவே செய்யும். போர் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

சிலவேளைகளில் அறியாமையின் காரணத்தாலும், சமூக உணர்வின்மையின் காரணத்தாலுங்கூட போர்கள் ஏற்படுவதுண்டு. ஆனால் இன்று உலகில் இவ்வித போர்கள் மிகக் குறைவு.

போரும் ஒரு அரசியல்தான். ஒரு வர்க்கத்தின் அல்லது தேசத்தின் அல்லது சமூகத்தின் முன்னோக்கிய வளர்ச்சிக்கு பாதகமாய் இருக்கும் அரசியல் தடையை நீக்குவதற்காக மேற் கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையே போராகும். அதாவது அரசியல் வளர்ச்சியின் ஓர் கட்டமும் தொடர்ச்சியுமே போராகும். இதையே ஒரு அறிஞன் ''அரசியல் என்பது இரத்தம் சிந்தாத போர், போர் என்பது இரத்தஞ் சிந்தும் அரசியல்'' என அழகாகக் கூறியுள்ளான்.

இன்றைய போர்கள் சங்ககாலத்துப் போர்களிலும் விட வேறுபட்டன. நவீன ஆயுதங்களின் வளர்ச்சியும், தொழில் நுட்பதிறன் மிக்க போர் நடவடிக்கைகளும், அரசியல் குணாம்சமுமே இவற்றிற்கான காரணங்களாகும் இன்றைய போர்கள் சமூகத்தின் ஒட்டுமொத்த நிலைமையிலும் ஒருதாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சமூகத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் போர் தனது செல்வாக்கைச் செலுத்துகின்றது. எந்தவொரு தனிநபரும் இதிலிருந்து தப்பிக்க முடியாத நிலையைத் தோற்றுவிக்கின்றது. ஒவ்வொருவரும் புரிந்தோ - புரியாமலோ விரும்பியோ - விரும்பாமலோ போர் நடவடிக்கைகளில் பங்கு பற்ற வேண்டியது அவசியமாகிறது. ஒவ்வொரு மனிதனின் சிந்தனையிலும் மனதிலும் போர் பல ஆழ்ந்த பதிவுகளை ஏற்படுத்தி விடுகிறது. இதனால்தான் 'போர் ஒரு மக்கள் திரள் கல்விக்கான சிறந்த களம்' எனக் கூறப்படுகின்றது. இது ஒரு திறந்த களமும் ஆகும்.

சமூகத்தின் பிரிக்கவொண்ணா அங்கமாய் இருந்துவரும் போரைப் பற்றிய கல்வியும், கண்ணோட்டமும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம். போர்கால சூழலுங்கூட ஒரு திரளாக செயற்படக் கூடிய நிலையில் உள்ள மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இவ்வித அறிவு மிக அவசியமானது. போர் என்பது ஏதோ தற்செயலான ஒரு துர்அதிஸ்டம் என்று கருதுவதும், விதியை நொந்து பல்லைக் கடித்து அதைச் சகித்துக் கொள்வதும் எமது விடுதலைக்கு தீங்கு விளைவிக்கும் ஒன்றாகவே முடியும்.

விடுதலைப் போர் என்பது ஒரு திருவிழா. விடுதலையின் அவசியத்தில் நிற்கும் மக்கள் உணர்வு பூர்வமாகவும், மனமகிழ்ச்சியுடனும், ஆக்கத்திறனுடனும் அப்போரில் பங்கு கொள்ள வேண்டும். அப்போது தான் எமது தோல்விகளை குறைத்துக் கொள்ள முடியும். எமது இழப்புக்களை சுருக்கிக் கொள்ள முடியும்; எமது பின்வாங்கல்களை சொற்பமாக்கிக் கொள்ள முடியும்; எமது வெற்றியை துரிதப் படுத்திக் கொள்ள முடியும்.

இயங்கு நிலையில் இருக்கும் அனைத்தையும் போல் போரும் தனக்கே உரித்தான தனித்தன்மையையும், பொது விதிகளையும், பிரத்தியோக விதிகளையும், கொண்டுள்ளது. இதுவும் ஒரு அறிவியலாகும் இது போரியல் கல்வி எனப்படும். ஆசிரியர்களும். மாணவர்களும் கல்வியின் இத்துறை

பற்றி அறிந்திருப்பது மிக அவசியமானதாகும்.

சமூகத்தின் அறிவுப் பரப்பின் வளர்ச்சிக்கு பாடசாலைகளின் பங்களிப்பு கேந்திர முக்கியத்துவம் பெற்ற தொன்றாகும். போரியல் கல்வி தொடர்பான மாணவர்களின் அறிவுப் பரப்பு வளரும் பட்சத்தில் சமூகத்தின் அறிவுபரப்பும் வளர்ச்சியுறும் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

இந் நோக்கத்திற்காகவே இத் தொடர் கட்டுரை எழுதப்படுகிறது. இக் கட்டுரை பின்வரும் அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

(1) கல்விப் பாடத்திட்டம் போரியல் கல்வியைத் தவிர்த்தது பற்றி.

(2) போரும் அரசியலும்.

(3) போரும் அதன் சமூக பயன்பாடும்.

(4) போரின் இறுதி முடிவைத் தீர்மானிக்கும் காரணிகள்.

(5) போரும் அதற்கவசிய நிறுவன கட்டமைப்புகளும்.

(6) புரட்சிகரப் போரின் வளர்ச்சி விதிகள்.

(7) புரட்சிகரப் போரின் இரு பெரும் வடிவங்கள்.

(8) நீடித்த போர்.

(9) இன்றைய குறிப்பான போரும் பாடசாலைகளின் குறிப்பான பணியும்.

(10) முடிவுரை.

5-ம் பக்கத் தொடர்ச்சி.

மல் நீருள் கிடக்கும் குமரிக்கண்டம் ஏன் அழிந்தது? அதைப்போல இன்னும் எத்தனையெத்தனை நிலப் பரப்புகள் அழிந்து போயின தெரியுமா? என்று கர்ச்சித்தது எரிநட்சத்திரம்.

உங்கள் கூட்டமே விசக்கூட்டம் தான். எமக்கு அது தெரியும். அன்றைய மனிதன் உன்னை எதுவுமே செய்து விட முடியாது இருந்ததால் உனது கூட்டத்தின் திருவிளையாடல் கச்சிதமாக நடந்திருக்கும். ஆனால் இன்று மனிதன் அந்த நிலையிலிருந்து மாறி விட்டான். உன்னால் மனிதனை அழிக்க முடியாது. ஆனால் மனிதன் உன்னை சில கணங்களுக்குள்ளே அழித்து விடுவான் என்றது ஆய்வுகூடக் கணனிப் பொறி.

எரிநட்சத்திரம் மிக அருகில் நெருங்கிக் கொண்டிருந்தது. மூர்க்கத்தனமான கர்ச்சனையை எழுப்பிய வாறு;

கணவேளைதான். அந்த ஒலிகள் எழுந்த அதே வேகத்தில் அந்த ஆய்வு கூடத்திலிருந்து ஏவப்பட்ட இராட்சத ஏவுகணை ஒன்று எரிநட்சத்திரத்தை வழி மறித்துத்தாக்கியது.

எரிநட்சத்திரம் பலத்த ஒலியோடு ஆயிரமாயிரம் துகள்களாகவும் துண்டுகளாகவும் நொருக்கப்பட்டது. எழுந்ததீப்பிளம்பு அடங்கியபோது எரிநட்சத்திரம் விரவிப்படர்ந்த தூதுமண்டலத்தின் துணிக்கைகளாகச் சிதறிப் பரவிக் கொண்டிருந்தது.

முன்னையமனிதனிலும் பார்க்க இன்றைய மனிதன் வேறுபட்டிருக்கின்றான் என்பதை விளங்கிக் கொள்ள எரிநட்சத்திரம் இல்லை

ஆய்வு கூடம் அமைதியாகத்தன் பணியை தொடர்ந்து கொண்டிருந்தது. பூமியைக் காத்த பெருமையை ஆய்வுகூடம் சாதனையாக்கிக் கொண்டு அமைதியடைந்தது.

# சூரியன் சிவப்பதேன்?

மத்தியான நேரத்தில் வெள்ளை நிறமாகக் காட்சியளிக்கும் சூரியன் உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் சிவப்பு நிறமாகத் தோன்றுவது ஏனென்று தெரியுமா?

பூமி சுழன்றபடி சூரியனைச் சுற்றுவதால் பூமியின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கும் சூரியனுக்குமிடையிலுள்ள தூரம் எல்லா நேரமும் ஒரே அளவாக இருப்பதில்லை உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் உள்ள தூரம் மத்தியானத்தில் உள்ள தூரத்திலும் பார்க்க ஐம்பது மடங்கு அதிகம்.

ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு ஆகிய ஏழு நிறங்களும் சேர்ந்தே சூரிய ஒளி வெள்ளையாகத் தெரிகின்றது, இவற்றுள் சிவப்பு நிறம் அதிகம் தெறிப்படைவதில்லை. மற்றைய நிறங்கள் விரைவில் தெறிப்படையும் தன்மையன. ஊதாநிறம் மிக விரைவில் தெறிப்படையக் கூடியது.

உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் சூரியக் கதிர்கள் நீண்ட தூரம் பயணம் செய்கின்றன. இந்த நீண்ட பயணத்தின் போது வளிமண்டலத்திலிருக்கும் தூசி, புகை, நீராவி போன்றவற்றால் மற்றைய நிறங்கள் தெறிப்படையச் சிவப்பு நிறமே எங்கள் பார்வைக்கு எட்டுகின்றது. இதனாலேயே உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் சூரியன் சிவப்பு நிறமாகத் தெரிகின்றது.

— சிவா —

# தற்போதைய நெருக்கடிகளும் மாற்று சிகிச்சை முறைகளும்

இன்றைய யுகத்தில் அலோபதிச் சிகிச்சை முறை என்றழைக்கப்படும் வைத்தியமுறை மேல் நாட்டில் வளர்ந்துவந்துள்ளன. இதுவே இலங்கையின் மருத்துவக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்பட்டு பிரபல்யமாக நாடளாவிய ரீதியில்செயல்பட்டு வரும் நவீன விஞ்ஞான மருத்துவ முறையாகும். எனினும் வளர்முக நாடுகள் முக்கியமாகஇலங்கை போன்ற சிறியநாடுகள் புதிது புதிதாக கண்டுபிடிக்கப்பட்டு வரும் மருந்துகளுக்கும் நவீன

> ‘பிரச்சினைகள் இன்னும் தொடர்வதால் வைத்தியர்கள் புதிதாக வருவதற்கு அச்சம் தெரிவித்துக்கொண்டிருக்க, மறுபுறம் இருப்பவர்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் மூடப்படவேண்டிய நிலை உருவாகலாமோ என்ற அச்சம் கூட ஏற்பட்டுள்ளது.’

விஞ்ஞான உபகரணங்களுக்கும் பெருமளவு அந்நியச் செலாவணியை பயன்படுத்தி இறக்குமதி செய்ய வேண்டி இருக்கிறது. அதுமட்டுமன்றி இம் மருத்துவ முறை அனைத்து நோய்களையும் முழுமையாக குணப்படுத்தும் என்பது இல்லை.

இந்நிலையில் நாம் எமது பாரம்பரிய சிகிச்சை முறைகளையும் வேற்று நாடுகளின் பாரம்பரிய சிகிச்சை முறைகளையும் நோக்கி எமக்குப் பயன் தருபவற்றை ஏற்று வளர்த்து நோய் தீர்க்கப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

*(அட்டவணை 4 ஐப் பார்க்க)*

இதில் முக்கியமாக வைத்தியர்களையும் வைத்திய நிபுணர்களையும் பொறுத்த மட்டில் நிலமை மிகவும் கவலையளிப்பதாகவும் உள்ளது. வைத்திய அதிகாரிகளும் நிபுணர்களும் இங்கு நடைபெறும் பிரச்சினைகள் காரணமாகவும் வெளிநாட்டில் கிடைக்கும் வசதி காரணமாகவும் வடக்கு கிழக்கு மாகாணத்தை மட்டுமல்ல நாட்டை விட்டே அதிகளவில் சென்றுவிட்டார்கள்.

83ம் ஆண்டு இருந்த வைத்தியர் தொகையும் 90ம் ஆண்டு வைத்தியர் தொகையும் அட்டவணை 5 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

பிரச்சனைகள் இன்னும் தொடர்வதால் வைத்தியர்கள் புதிதாக வருவதற்கு அச்சம் தெரிவித்துக் கொண்டிருக்க மறுபுறம் இருப்பவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் யாழ் பல்கலைக் கழக மருத்துவபீடம் மூடப்பட வேண்டிய நிலை உருவாகலாமோ என்ற அச்சம் கூட ஏற்பட்டுள்ளது.

(அட்டவணை 6 ஐப் பார்க்க)

மருத்துவபீடம் இயக்க வேண்டும், பேராசிரியர்ளும் விரிவுரையாளர்களும் தங்கள் சுயநலம் பாராது சவையாற்ற வேண்டும் என்று கருதுபவர்களிலும் விட தமது பரீட்சைகள் முடிந்து வெளியேறி வெளியே சென்றுவிட வேண்டுமென்று கருதுபவர்களே அதிகமாக இருக்கிறதாகத் தெரிகிறது.

## தமது சுகத்திற்கு மக்களே பொறுப்பேற்றல்.

நவீன விஞ்ஞான அலோபதிக் மருத்துவ முறைகளினால் குணப்படுத்த முடியாத சில நோய்களுக்கு இம்முறைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு குணப்படுத்த முடிகிறது.

இச்சிகிச்சை முறைகள் பெரும் அந்நியச் செலாவணியை விழுங்கும் உபகரணங்களை நம்பி செயல்படுபவை அல்ல. செலாவணியை விழுங்கும் மருந்து வகைகளை நாமே உற்பத்தி செய்து நமது பிரதேசங்களிலே இவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

இம்முறைகள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது மட்டுமல்லாது, எந்தக் கிராம மட்டத்திலும் செயற்படுத்தக் கூடியதுமாகும்.

இன்று வடக்கு கிழக்கில் பயன்படுத்தப்பட்டு வரும் மாற்று மருத்துவ முறைகளாவன: சித்த வைத்தியம், ஆயுள் வேத வைத்தியம், யுறானி வைத்தியம், ஹோமியோபதி வைத்தியம், அக்கியூபங்சர் வைத்தியம், யோகாசனப் பயிற்சி உடலுறுதிப் பயிற்சி சிகிச்சை முறைகள் ஆகியன.

சித்தவைத்தியம் சித்தர்களால் ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாட்டில் வளர்ந்து மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு யாழ் பல்கலைக் கழகம் மூலமாக இன்று போதிக்கப்பட்டு வருகிறது. காலப் போக்கில் நலிந்து விட்டாலும் இன்று புத்துயிர் பெற்று தமிழ்நாட்டில் பெரும் வளர்ச்சி பெற்று வருகின்றது. தமிழ் நாட்டின் உதவியுடன் எமது பிரதேசத்தில் இத்துறை வளர்க்கப்பட்டு மக்களுக்கு பயன் அளிக்கக் கூடிய விதமாக சித்த வைத்திய சேவை மறுசீரமைக்கப்பட வேண்டும்.

இதற்காக வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்தில் பணிப்பாளர் மாற்று வைத்தியமுறை எனும் பதவி ஏற்படுத்தப்பட்டு இப் பதவி தகுதிவாய்ந்த ஒரு வைத்தியர் ஒருவருக்கு வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு உப அதிபர் பிரிவிலும் மூலிகைத் தோட்டம் அமைத்து மூலிகை வளர்ப்பை பெருக்குவதற்கும் மக்களுக்கு மூலிகைகளை அடையாளம் காண்பிப்பதற்கும் உதவியாய் இருக்கும்.

இதே முறையில் யுறானி, ஆயுள்வேத, ஹோமியோபதி அக்கியூபங்சர் முதலிய முறைகளும் வடக்கு கிழக்கு மாகாண மாற்று வைத்திய பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். இத்துறை சார்ந்த வைத்தியர்களும் சித்த வைத்தியர்களும் வைத்திய நிறுவனங்களும் கட்டுப்பாடான ஒழுக்க நெறியிலிருந்து தத்தமது வைத்திய முறைகளை மட்டுமே பயன்படுத்துவது நிச்சயப்படுத்தப்பட வேண்டும். இன்று எமது பழம் பெருமை வாய்ந்த இவ்வைத்திய முறைகள் அழிவதற்கு முக்கிய காரணமாக இருப்பது இத் துறை சார்ந்த வைத்தியர்கள் தாம் கற்று அறியாத மேற்கத்தைய முறை மருந்துகள் சிறந்தவை எனும் உணர்வை தம்மை அறியாது வளர்ப்பதும், அம்மருந்துகளின் குணங்களை அறியாது இருப்பதுமாகும் அதனால் சமுதாயத்தில் ஏற்படும் தாக்கத்திற்கும் இவர்களே பொறுப்பாளியாகின்றனர்.

### யோகாசனப் பயிற்சியும் உடலுறுதிப் பயிற்சியும்

உடலில் நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு உடலும் உள்ளமும் உறுதி பெறுவது ஒரு அத்தியாவசியமான காரணமாகும். மனநிலை உறுதி பெறுவதற்கும் வளர்ச்சி அடைவதற்கும், உடலுறுதி அடைவதற்கும் யோகாசனப் பயிற்சி, உடலுறுதிப் பயிற்சி, விளையாட்டுப் பயிற்சி முதலியவை சுகாதார நோக்கோடு செய்யப்படவேண்டும். மக்கள் சீனா சோவியத் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இவற்றின் நன்மைகளை உணர்ந்து உடற் பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியர்.
(போசாக்கும் மருத்துவமும்)

அட்டவணை 4

| தொழில் | வடக்கு கிழக்கு இருக்க வேண்டிய எண்ணிக்கை | வடக்கு கிழக்கு இருப்பவர் எண்ணிக்கை | இருப்பவர் எண்ணிக்கை 100,000 பேருக்கு / ஆக முழு இலங்கை | வடக்கு கிழக்கு |
|---|---|---|---|---|
| வைத்திய நிபுணர் ... | 77 | 27 | 12.5 | 6.6 |
| வைத்தயர் ... | 215 | 127 | 12.5 | 6 6 |
| உதவி வைத்தியர் ... | 243 | 216 | 6.6 | 8.9 |
| தாதி உத்தியோகத்தர் ... | 1301 | 598 | 50 1 | 23.3 |
| பொது சுகாதார தாதி .. | 81 | 05 | 0 9 | 0 16 |
| பொது சுகாதாரப் பரிசோதகர் ... | 270 | 94 | 5.9 | 4 26 |
| குடும்ப நல சேவையாளர் ... | 811 | 295 | 19.3 | 11.9 |
| கதிரியக்கப் படப்பிடிப்பாளர் ... | 72 | 13 | — | — |
| இயல்பியல் சிகிச்சையாளர் ... | 22 | 11 | — | — |
| பற்சிகிச்சையாளர் ... | 290 | 07 | — | — |
| சுகாதார போதனாசிரியர் ... | 05 | 01 | — | — |
| தாதிப் போதனாசிரியர் ... | 20 | 05 | — | — |
| ஆய்வுகூட வியலாளர் ... | 68 | 49 | — | — |

அட்டவணை 6

| | 85ஆம் ஆண்டு எண்ணிக்கை | | 90ம் ஆண்டு எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | இருக்க வேண்டியது | இருந்தது | இருக்க வேண்டியது | இருந்தது |
| பேராசிரியர் ... | 12 | 10 | 12 | 09 |
| சிரேஷ்ட / சாதாரண விரிவுரையாளர் ... | 36 | 27 | 39 | 19 |
| ஃ மொத்தம் ... | 48 | 37 | 61 | 28 |
| விகிதாசாரம் ... | — | 77% | — | 55% |

# ஓவியம் - வாக்கியம்

## பதில்கள்

வெறும் புத்தக கற்றையாய்
அமிழ்த்தி அமிழ்த்தி
மண்டைகள் வீங்கிப்போனோம்
சுய சிந்தை வளர்ச்சி காணோம்.
பரீட்சை மண்டபந்தன்னில்
கொட்டி முடித்து
வெற்று மண்டைகளாய் வருவோம்
மண்ணில்
மந்தைகளாக மேய்வோம்.

பி. ஜனகன்
யா/ புனிதமரியாள் கல்லூரி
யாழ்ப்பாணம்.

கிணற்றுத் தவளையைப் போல்
வெளியுலகத்தொடர் பின்றி
புத்தகமெனும் சுமைதாங்கி
தனை மறந்து
படிப்பில் திளைக்கும்
புத்தகப் பூச்சி இவர்!

சூ. ஆன் சுபோதினி
6/3, மாட்டின் வீதி
யாழ்ப்பாணம்.

❀ ஏட்டுக் கல்வியை
மூட்டையாய் சுமக்கும்
மாட்டுப் பிறப்பாகி விட்டேன்
நாட்டு நடப்புகள் அறியேன்
வாழ்வில்
நர்னோர் நடைப்பிணம் ஆனேன்!

பி. கௌசிகன்
மு/ வற்றாப்பளை
றோ. க. த. க. பாடசாலை.

புத்தக சுமைக்குள்
மூழ்கித் தவிக்கும் இளைஞனே!
இனியும்
எடுகோள்களையும்
கோட்பாடுகளையும்
சமன்பாடுகளையும்
இரை மீட்டு
அந்த நிழலிலே
உன்னைத் தொலைக்கப் போகிறாயா?
எழுந்து நிஜத்துக்கு வா
யதார்த்த வாழ்வின்
நடை முறைகளை
ஆய்வு செய்வோம்.
சமுக பிரச்சனைகளுக்கு
தீர்வு காண்போம்.

சு. ஸ்ரீ குமரன்
முருகேச பண்டிதர் வீதி
சுன்னாகம் தெற்கு.

குறிப்பு :-

ஓவிய - வாக்கியப்போட்டிக்குப் பல கவிதைகள், வசனங்கள் வந்து சேருகின்றன. பொருத்தமானவையாக அவை காணப்படினும் போட்டி விதிக்கேற்ப ஆறு வரிகளுள் அமைவதாக இல்லை. இம் முறையிலிருந்து ஆகக் கூடியது பத்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதி அனுப்புவதில் கவனம் செலுத்துங்கள். பரிசுக்குரியதோடு நல்லதாகக் காணப்படும் மேலும் மூன்று கவிதைகள் அல்லது வசனங்கள் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இங்கு காணப்படும் கவிதைகளில் ❀ அடையாளமிடப்பட்ட கவிதை பரிசுக்குரியதாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### துப்பாக்கி.

முதன் முதலாக துப்பாக்கியைப் பயன்படுத்தியவர்கள் ஸ்ப்பானியர். செறிக்னோவா என்ற போர்க்களத்திலே கான்சாலோ என்பவரே முதன் முதல் துப்பாக்கியை இயக்கியவர். அதன் வடிவ, அமைப்பு முறைகள் பின்னர் புதியவைகளாக மாறின.

தொகுப்பு —: இ செல்வதர்சினி
11 - ம் ஆண்டு
யாழ் நகர்க் கல்லூரி
காரைநகர்.

# ஔவையார்

தமிழ் மொழியையும், தமிழர் பண்பாட்டையும் வளர்ப்பதில் ஆதிகால புலவர்கள் பெரும் பங்காற்றியுள்ளார்கள். அவர்களுள் ஔவையார் எனப்படும் பெண் புலவர் மிக்க புகழுடையவராகும். இவர் சாகா வரம் பெற்றவர் என்றும் உயிருடன் கயிலாயம் சென்றார் என்றும் முழு நிலாவில் காணப்படும் கருநிழல் ஔவைப் பாட்டியின் உடையது என்றும் புனை கதைகள் உண்டு.

**சங்க கால நிலைமைகள்**

முதலாவது ஔவையார் சங்க காலத்தின் இறுதிக் காலமான கடைச் சங்க காலத்தவராகும். சங்க காலம் என்பது தமிழ் நாட்டில் கிறிஸ்துவுக்குப் பின் 1-ம் நூற்றாண்டில இருந்து 3-ம் நூற்றாண்டு வரையான சுமார் 300 ஆண்டுகளைக் குறிக்கும். இக்காலத்தில் தமிழ் புலவர்கள் தொடர்ச்சியாக ஒன்று கூடி. தாம் இயற்றியவைகளையும், இயற்ற இருப்பவைகளையும் நமக்குள் கலந்துரையாடிக் கொண்டார்கள். இவ்வகை ஒன்றுகூடலே தமிழ் சங்கம் எனப்படும். இதற்கென தனியானதோர் அவையும் இருந்தது. மன்னர்களும், பிரபுக்களும் இத் தமிழ் சங்கம் இயங்க தம்மாலான ஒத்துழைப்புகளைச் செய்தார்கள்.

சங்க காலத்தில் தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று குலகுழமங்கள் இருந்தன. இம் மூன்று குழுமங்களின் ஆட்சி பகுதிகளையும் தவிர தமிழ் நாடு வேறும் பற்பல சிறுசிறு துண்டுகளாக பிரிக்கப்பட்டு அவை சிறுசிறு குலத்தலைவர்கள் என்று கூறப்படுபவர்களால் ஆளப்பட்டும் வந்தனர். பாரி,

## பழந்தமிழ் பெரியார் வரிசை

காரி, அதிகமான், தொண்டைமான் போன்றோர் அவர்களில் சிலராகும். சேர, சோழ, பாண்டியர்கள் என அழைக்கப்பட்ட மூவேந்தர்கள் தமக்குள் சண்டையிட்டும், இக் குலத்தலைவர்களை அழித்தும் அவர்கள் நாட்டையும், உடைமைகளையும் தமதாக்கியும் வந்தார்கள். இதுதான் சங்க காலத்து அரசியல் நிலையாகும்.

'கலைமகள்' என்றும் பாராட்டப்பட்ட இச் சங்க காலப் புலவரான ஔவையார் குலத்தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவளாக இருந்தாள். அதிகமான் என்னும் குலத்தலைவனே இவரை அதிகம் ஆதரித்து வந்தார்.

**கூழுக்காகக் கவிபாடும் கூனற்கிழவி**

சங்க காலத்தில் நிலவிய போர் நிலைமையின் காரணத்தால் தமிழ் நாட்டில் உணவுப் பஞ்சம் நிலவியதை அக்கால இலக்கியங்கள எடுத்துக்காட்டுகின்றன. சான்றோர்கள் என அழைக்கப்பட்ட சங்க காலப் புலவர்கள் தமக்கு என்று சொந்தமாய் பொருளாதார வருமானம் எதுவும் இன்றி வறுமையில் வாடி மன்னர்கள், குலத்தலைவர்கள், பிரபுக்கள் ஆகியோரிடம் கையேந்திப் பிழைப்பவர்களாகவே இருந்துள்ளனர். ஔவையாரையும் இவ் வறுமை விட்டுவைக்கவில்லை. ஔவையாரின் பல பாடல்கள் அவரின் வறுமை நிலையையும் வறுமையின் அனுபவத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

''கொடியது கேட்கின் வெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
............'' என்று தொடர்கிறார்.

இன்னோர் இடத்தில் பசிக் கொடுமை தாங்காது பின்வருமாறு கூறுகிறார்.

''ஒருநா ளுணவையொழி யென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய் - ஒருநாளும்
என்னோலறியா இரும்பைகூட றென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது''

இதன் கருத்து - ''துன்பம் மிகத் தருகின்ற எனது வயிறே, ஒருநாள் உணவை விடச்சொன்னால் விடவும் மாட்டாய், இரண்டு நாளுக்கான உணவை ஒரு நாளில் ஏற்றுக் கொள் என்றால் அதுவும் கேடக மாட்டாய். என்றைக்குமே நீ எனது கஷ்டத்தைப் புரிந்து கொண்டதில்லை. ஆகையால் உன்னோடு சேர்ந்து வாழ்தலே எனக்குப் பெருந் தொல்லையப்பா.''

---

சங்க காலப் புலவரான ஔவையார் புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை போன்ற நூல் தொகைகளில் 59 பாடல்களைப் பாடியுள்ளார்.

கம்பர் காலத்து ஔவையார் கி பி 12ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை, பந்தனந்தாதி போன்ற நூல்களையும் சில தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.

சமயப் புலவரான ஔவையார் 14ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் ஔவைக் குறள் என்ற நீதி நூலையும் விநாயகர் அகவல் போன்ற சமயப் பாடல்களையும் பாடியுள்ளார்.

ஆத்திசூடி கொன்றைவேந்தன் போன்ற நூல்களில் பெண்ணடிமைத்தனத்தை ஏற்றுக் கொண்ட, வலியுறுத்திய ஔவையார் 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பர் காலத்து ஔவையாரே. சங்க காலத்து ஔவையாரே முதன்மையான ஔவையாகும்.

இடம்பட வீடெடேல் - அளவுக்குமேல் விசால
மான வீடுகள் கட்டாதே.

இளமையில் கல்
கொள்ளை விரும்பேல்
சோம்பித் திரியேல்
துன்பத்திற் கிடங்கொடேல்
தோற்பன தொடரேல்
நூல்பல கல்
நோய்க்கிடங் கொடேல்
மனந்தடுமாறேல்

**கொன்றைவேந்தன்:-**

இது நான்கு சொற்களைக் கொண்ட சூத்திர மாகும். 91 சூத்திரங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை உதாரணமாக தருகிறோம்.

- அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
- ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
- கிட்டாதாயின் வெட்டெனமற
- கீழோராயினுங் தாழவுரை

கருத்து - தாழ்ந்தோரிடத்திலுங் கூட தாழ்மையாகப் பேசு

- சூரம்பாயினும் வீரியம் பேசேல்

கருத்து - உன்கையில் கூரிய அம்பிருந்தாலுங்கூட உன் வீரத்தை வியந்து பேசாதே,

- சீரைத் தேடினோரைத் தேடு
- சூதும் வாதும் வேதனை செய்யும்
வாது என்பது விதண்டாவாதம்
- நீராக் கோபம் போராய் முடியும்
- நுண்ணிய கருமமு மெண்ணித் துணி
ஓதாதார்க் கில்லை யுணர்வோடு மொழுக்கம்
நல்ல நூல்களை கல்லாதவர் (ஓதாதவர்)

**மூதுரை:-**

இது நான்கு அடிச் செய்யுள்களாகும். எல்லாமாக 31 செய்யுட்கள் உண்டு. ஓர் இரு உதாரணம்;

அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

கற்பினவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்தர்
பொற்பினவோ டொப்பாரும் போல்வாரே
- விற்பிடித்து
நீர் கிழிய எய்த வடுப்போல் மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்

கருத்து - கீழோர் தமக்கிடை அடிபடுவார்களானால் அப் பகை கல் பிளந்தது போன்றது அவர்கள் என்றுமே ஒன்றுபடார். சான்றோர் களிடையே ஏற்பட்ட கோபம் நீரின் மேல் ஏற்பட்ட பிளவு போன்றது. அவர்கள் தாமாகவே அதை விரைவில் மறந்து விடுவார்கள் இவ் இரு சாராருக்கும் இடை நடுவில் உள்ளவர்களிடை ஏற்பட்ட பிளவு பொன் பிளந்தது போன்றது. இன்னொருவர் ஒட்டினால் ஒட்டிக் கொள்ளும். அதாவது பிறர் முயற்சியால் இணைந்து கொள்வார்கள்.

**நல்வழி**

இதுவும் நாலடிச் செய்யுளாகும் 40 செய்யுள்கள் உள்ளன. செய்யுள்களை உதாரணத்திற்குத் தருகிறோம்.

சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாத இழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி.

பட்டாங்கு என்பது உண்மை நூலாகும்.

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லோருஞ்சென்றங் கெதிர்கொள்வர்-இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய் வேண்டாள்
செல்லாதவன் வாயிற் சொல்.

**ஔவையார் இயற்றிய தனிப்பாடல்களில் ஒன்று:-**

கற்றதுகை மண்ணளவு கல்லாத துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள் - மெத்த
வெறும் பந்தயங் கூறவேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலே சாண்.

**ஔவைப் பாட்டியின் வேண்டாத பகுதிகள்**

கவிச் சுவையும், கருத்தாழமும் மிக்க ஔவையின் நூல்கள் நாம் அனைவரும் கற்கவேண்டிய தொன்றாகும். அவை ஒழுங்கு முறையான வாழ்க்கைக்கு அவசியமான நல்லறங்களாகும் ஆனால் அவரின் கருத்துக்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதொன்றல்ல. அவர் பெண் அடிமைத் தனத்தை ஊக்குவித்தவராகவே இருந்துள்ளார். அவரின் செய்யுள்களை உதாரணங் காட்டுவோம்.

ஆத்தி சூடியில் 62 வது சூத்திரம்
"தையற் சொற் கேளேல்"

கருத்து — மனைவி சொல் கேட்டு நடவாதே.

கொன்றை வேந்தனில் 5 வது சூத்திரம்,
உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு

மறுப்பு — உடலியல் விஞ்ஞானத்தின் படி பெண்களுக்கு ஆண்களிலும் விட அதிகளவு புரதம் தேவைப்படுகிறது ருதுப்படும் நேரத்தில் (பூப்புனிதகாலம்) புரதம் மேலதிகமாக அவசியம். கர்ப்பமாய் இருக்கும் காலத்தில் மற்றோர் ஜீவனை தாய் வளர்க்கிறாள். ஆகவே அவளுக்கு கூடுதல் புரதம் தேவை. பாலூட்டும் காலத்தில் சக்தி மிக்க புரதத் திரவத்தை அவள் சுரக்கிறாள் இங்கும் மேலதிக புரதம் தேவையாகிறது.

கொன்றை வேந்தனில் 14 வது சூத்திரம்
"கற்பெனப் படுவது சொற்றிடம் பாமை"

கருத்து — கணவன் வார்த்தைக்கு மாறுபடாமல் நடப்பது தான் கற்பாகும்.

மறுப்பு — கணவனின் கற்பு எவ்விதம் என்பதற்கு எந்த இடத்திலும் விளக்கம் இல்லை. "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்பதற்கு இது உதவி புரிகின்றது.

கொன்றை வேந்தன் 45 வது சூத்திரம்
'பேதமை யென்பது மாதர்க் கணிகலம்'

கருத்து — அறிந்தும் அறியாதவர்கள் போல் அடங்கியிருக்கும் குணம் பெண்களுக்கு ஆபரணமாகும்

... 14 ஆம் பக்கம் பார்க்க

சிறுகதை

# எனக்கோர் வெள்ளைச்சட்டை

ஜெய உதயமாலினி


ஏம்பேரு லஷ்மி நான் இன்னிக்கு பள்ளிக்கூடம் போகல்ல. எனக்கு படிக்க ரொம்ப ஆசைதான். ஆனா நான் இன்னிக்கு போகல்ல, ஏன்னு கேக்கிறீங்களா? நேத்து எங்க டீச்சர் எனக்கு அடிச்சுப்போட்டா. நான் ஒரு குற்றமும் செய்யல்ல ஆனா எனக்கு டீச்சர் எல்லாருக்கும் முன்னால வெச்சு அடிச்சுப் போட்டா. அது எனக்கு வெக்கமா போச்சு. மனசுக்கு ரொம்ப வேதனையாப் போச்சு. எங்க டீச்சர் நல்ல டீச்சர்! நல்லா பாடம்சொல்லித் தருவா. எனக்கு படிக்கிறதுன்னா ரொம்ப ஆசை. டீச்சர் சொல்லித்தாற பாடமெல்லாம் நல்லாப் படிப்பேன். எங்க டீச்சர் நல்லாப்பாடுவாங்க நானும் நல்லாப் பாடுவேன். பாடிக் காட்டட்டுமா?

பாலர் நாங்கள்
ஏழையென்ற பேதம் இல்லையே,
சிலராக ஒன்று கூடிப்
பாடி ஆடுவோம்.

அம்மா அப்பா ஆசிரியர்
சொல்லைக் கேட்டுமே
ஆனந்தமாய் ஒன்றுகூடி
ஆடிப் பாடுவோம்.

நல்லா இருக்கா? நான் ரொம்ப இனிமையாப் பாடுறேன்னு டீச்சர் சொல்லுவா. எங்க டீச்சர் எங்களுக்கு வெளயாட்டு சொல்லித் தருவாங்க. நான் முன்னுக்குப் போய் வெளயாட மாட்டேன். எனக்கு எல்லாருக்கும் முன்னாலே போய் வெளயாட படிக்க ஆசைதான். ஆனா நான் முன்னால போய் நிக்க மாட்டேன் டீச்சர் என்னை பின்னுக்குத்தான் விடுவா, நானும் விருப்பமில்லாம ஒதுங்கிக் கொள்வேன். சுபாசினி, தர்சினி, கலா, லதா இவங்கதான் முன்னுக்குப்போய் வெளயாடுவாங்க. பாடுவாங்க, எழுதுவாங்க. டீச்சருக்கு கிட்டவே நின்னுடுவாங்க நம்மட டீச்சருதானே, நானும் நிக்கலாமில்லையா? எனக்குப் பயம். டீச்சரு அடிப்பாங்க.

எனக்கு எழுத்து எழுதவும் ரொம்ப விருப்பம். கொஞ்சம் பிழையாத்தான் எழுதிறேன்னு டீச்சர் சொல்லுவாங்க. அனனிக்கு ஒரு நாள் நான் வீட்டுக்குப் போறப்போ ஒரு பென்சில் கீழ கெடந்து எடுத்தேன். அந்தப் பென்சிலாலதான் நான்எழுதிகிட்டு வந்தேன். ஆனா ரமேஸ் டீச்சருக் கிட்ட போய் ''டீச்சர்! டீச்சர் ஏன்ட பென்சில லஷ்மி களவெடுத்துப் போட்டுது'' என்று சொல்ல டீச்சர் எனச்கு அடிக்க நான் களவெடுக்கவேயில்லை என்னு சொல்லியும் டீச்சர் ஏம்பென்சில வாங்கி ரமேசுக்குகுடுத்துட்டாங்க. எனக்கு



இப்ப எழுத பென்சிலே இல்ல காசும் இல்ல. எங்கப்பாவும் இல்ல. அம்மாகிட்ட பென்சில் கொப்பி வாங்கித் தாங்கன்னு கேட்டா, அவசொல்லுவா...''சும்மா போயி படிபுள்ள. நான் புல்லு புடுங்கப் போறப்போ உனக்கு பென்சில் கொப்பி வாங்கித்தாறேன். நான் என்ன சம்பளமா எடுக்குகிறேன்'' எண்டு பேசுவா. எங்கம்மா, டீச்சர் மாதிரி சம்பளமா எடுக்குது? எங்க டீச்சர் சம்பளம் எடுக்கிறவங்கதானே? எனக்கொரு பென்சில் வாங்கிக்குடுத்தா என்ன?

எனக்கு எழுத ரொம்ப ஆசையா இருக்கு என்னப்போல வடிவேல் சிந்தாமணி, பார்வதி இவங்களும் கஷ்டப்பட்டவங்கதான். பாவம் வடிவேல். அவங்க அப்பாவ ஆமி சுட்டுப்போட்டான். அவனுக்கும் பென்சில் கொப்பி இல்ல. எங்கம்மா எப்ப புல்லு புடுங்கப் போவா? நா எப்ப எழுதிப்படிக்கிறது.? எங்கம்மா, அண்ணாவுக்கும், அக்காவுக்கும் ஒரு பென்சில வாங்கி ரெண்டா ஒடச்சிக் குடுப்பா. நா அக்காட பென்சில எடுத்து எழுதிட்டு மெல்ல வைச்சுருவேன். அக்கா அடிக்கும் ஆனா எங்கவீட்டில மண்ணுமட்டும் தாராளமா இருக்கு. எங்க டீச்சர் எங்களுக்கு கைவேலை சொல்லித் தருவா களிமண்ணால மாம்ளம், வாழைப்பழம், அம்மி, உரல் எல்லாமே செய்துகாட்டுவா. எங்க வூட்டுக்குப் பின்னாலே நெறயக் களிமண் கெடக்கு. நான் நெறய வெட்டி, தண்ணி ஊத்திப் பெசஞ்சி லக்ஸ்பிறே பையில போட்டு டீச்சருக்கிட்ட குடுப்பேன். தர்சினி, கலா, லதா, இவங்ககிட்ட களிமண் இல்லியாம். நான் அவங்களுக்கும் நெறயக் குடுப்பேன்

...14 ஆம் பக்கம் பார்க்க

## எனக்கும் ஓர் வெள்ளை . . .

— 13ம் பக்கத் தொடர்ச்சி

சந்தோஷமா டீச்சரும் அவங்க எல்லாருக்கும் குடுப்பா. நான் தான் வடிவா கைவேலை செய்யிறேன்னு டீச்சர் சொல்லுவா. ஏதோ சொல்லவந்து எங்கோ போயிட்டேன்னு நினைக்காதீங்க, நல்லா நினைவிருக்கு. நேத்து எனக்கு டீச்சர் அடிச்சுப்போட்டா. சுத்தம் பாத்துகிட்டு வாறப்போ எனக்கு அடிச்சுப் போட்டா. எனக்கு இப்ப நெனச்சாலும் அழுகையா வருது. கோவம்கூட வருது. நான் விடியக் காலத்தால எழும்பி, பல்லுத்தீட்டி; முகம் கழுவி சாமி கும்புட்டு, விபூதி பூசிக்கிட்டுதான் பள்ளிக்கூடம் வருவேன். டீச்சர் எனக்கு அதுக்காக எனக்கு அடிக்கல்ல. சுத்தமா, வெள்ளையா வரணுமாம், ஏன்ட சட்டையைப் பார்த்து புட்டுத்தான் எங்க டீச்சர் எனக்கு பல பேருக்கு முன்னால அடிச்சுப் போட்டா. முந்தி நான் நிறச்சட்டைதான் போட்டுக்கிட்டு வருவேன். இப்ப எங்கட பள்ளிக்கூடத்த அரசாங்கம் பாரம் எடுத்துப் போட்டுதாம். வெள்ளை உடுப்போடதான் வரணுமாம். அப்பிடி வந்தா அழகாத்தான் இருக்கும். நான் கூட ரொம்ப அழகா இருப்பேன் இல்லியா. ஆனாஎனக்கு சட்டை இல்லியே? எங்கவீட்டுக் களிமண்ண நான் அவங்களுக்கு நெறய, நெறய குடுத்தன்தானே? அப்ப அவங்க எனக்குஒரு வெள்ளைச் சட்டை தரக்கூடாதா? நீங்களே சொல்லுங்க வெள்ளைச்சட்டை வாங்க வழிசொல்வீங்களா?

நான் இப்ப என்ன செய்ய? எங்கம்மா பாவம். ஒரு நாளிக்கி பத்துரூபா காசு ஐஞ்சு கொண்டு வருவா. போதாதாம். எனக்கு ஒரு பென்சில், ஒரு கொப்பி, ஒரு வெள்ளைச்சட்டை இவ்வளவும் இருந்தா நான் ஒழுங்கா படிப்பேன். பெரிய மனுஷியா வந்து நானும் டீச்சரு மாதிரி படிப்பிப்பேன் கஷ்டப்பட்டவங்களுக்கு வெள்ளைச் சட்டை வாங்கிக் குடுப்பேன். இப்ப எனக்கு வெள்ளைச்சட்டை இல்லியே. எனக்கு அழுகையா வருது.

பள்ளிக்கூடத்திலே நாங்கள்பாடுற பாட்டு ஒன்று உங்களுக்கு தெரியுமா? இதோ பாடுறன் கேட்டுக்கங்க.

'பாலர் நாங்கள் ஏழையென்ற பேதமில்லையே சிலராக ஒன்றுகூடி பாடிஆடுவோம்''

அப்படிப்பாடுறப்போ நாங்க எல்லாரும் கைகோத்து சுத்தி சுத்தி ஆடுவோம்.

ஐயோ! வெள்ளைச் சட்டை இல்லாட்டா அவங்க என்னை விட்டுட்டு ஆடுவாங்களோ என்றத நினைக்கத்தான் பயமாயிருக்கு.

## ஔவையார்

— 11ம் பக்கத் தொடர்ச்சி

### ஔவையின் நூல்கள்

இவ்விதமான வறுமையில் வாழ்ந்தாலும் ஔவையார் நீதி நெறியில் இருந்து விலகவில்லை. பல நீதி நூல்களைப் படைத்தார் அவரால் படைக்கப்பட்ட நூல்களாவன:- ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக் கோவை, பந்தனந்தாதி ஆகியவையாகும். இவற்றைவிட பல தனிப்பாக்களும் உண்டு.

ஆத்திசூடி:-

இலகுவில் விளங்கக்கூடிய இரு சொற்களைக் கொண்ட சூத்திரமாகவுள்ளன. எல்லாமாக 108 சூத்திரங்கள் உண்டு. அவற்றில் மிகச் சிலவற்றை தருகிறோம்.

அறஞ்செய விரும்பு<br>
ஆறுவது சினம்<br>
ஊக்கமது கைவிடேல் - செய்யும் தொழிலில் மன எழுச்சியை கைவிடாதே<br>
ஔவியம் பேசேல் - பொறாமைப்பட்டுப் பேசாதே

இவ்விதம் இன்னும் பல உள்ளன. 'அமிழ்தில் இனிய சொற்கிழவி' பல நச்சுக்களையும் சிந்தியுள்ளாள் என்பதை நாம் மறுக்கமுடியாது. அதை நீக்கி நல்லதை எடுப்போம்.

### ஔவையின் காலம்

ஔவையின் காலம் எது என்பது பற்றியும் பல கருத்துக்கள் உள்ளன. கம்பர் காலத்திலும் ஔவையார் இருந்ததாக உண்டு. ஔவை என்ற பெயருடன் பல பெண்புலவர்கள் இருந்துள்ளதாக இப்போது கருதப்படுகிறது.

— லோகன் —

### உலகின் முதல் தேசியக் கொடி.

உலகின் முதன் முதலாக தேசியக் கொடியை தேசிய சின்னமாக ஏற்றுக்கொண்ட நாடு டென்மார்க் அது கி. பி. 1218-ல் தனது தேசியக்கொடியை அறிவித்தது. 1339-ல் சுவிற்ஸ்லாந்தும் அதை அடுத்து அமெரிக்கா, பிரான்சும். 1805-ல் இத்தாலியும் தமது தேசியக் கொடிகளை அமைத்துக்கொண்டன.

சாளரம்

கதவு 1 காற்றலை 4

# விபுலானந்தரும் தண்டிக்கப்படக் கூடாது!

தென் தமிழீழ (கிழக்கு மாகாணம்) வாணர்களின் (அறிஞர்கள்) முன் முயற்சியின் பலனாக வட தமிழீழ வாணர்கள் விபுலானந்தர் நூற்றாண்டு விழாவை கொண்டாட முன்வந்துள்ளமை உவகையூட்டும் ஒரு செய்தியேயாகும். பேராசிரியர் துரைராஜா அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். பாடசாலைகள் மட்டத்திலான நிகழ்ச்சிகளை கல்வி அதிகாரி திரு. சுந்தரலிங்கம் அவர்களும், கிராம மட்டத்திலான நிகழ்ச்சிகளை ஆணையாளர் திரு. டிவகலாலா அவர்களும் பொறுப்பேற்றுள்ளார்கள். இவர்களின் தலைமையில் இந் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறோம்.

இந் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் யாழ் குடாநாட்டினுள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாய் அமையக் கூடாது. வன்னிப் பகுதியின் அனைத்து மாவட்டங்களிலுங் கூட இது நடத்தப்பட வேண்டும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் ஈழகேசரி பொன்னையா நினைவு தின விழாவில் கூறிய விடயம் இங்கு மீளவும் நினைவுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

"......... ஆனால் இதில் விசனம் தருவ தென்னவெனில், யாழ்ப்பாண வரலாற்றின் அத்தியாயங்கள் எனக் கருதப்படும் அந்தத் தனிப்பட்ட வாழ்க்கை வரலாறுகளின் மிக முக்கியமான வரலாற்றுண்மைகள் சில மறைக்கப்படுமளவுக்கு எடுத்துக் கூறப்படாமையாகும். ஆறுமுகநாவலர் முதல் பொன்னம்பலம் இராமனாதன் வரை பலர் இந்த நோக்குக் காரணமாகத் தண்டிக்கப்பட்டு விட்டனர் என்றே சொல்ல வேண்டும்."

ஆம் வாணர் விபுலானந்தர் அவர்கள் தண்டிக்கப்படக் கூடாது. அதேபோன்று, சைவ சமயத்துள்ளும், இலக்கிய படைப்புக்குள்ளும் மாத்திரம் அவரை முடக்கி விடக்கூடாது. அவர் அப்படி முடங்கியிருந்தவரும் அல்லர். அவர் முற்றுப் பெற்றுவிட்ட சாதனைகள் பல புரிந்த ஒரு இறந்துவிட்ட மனிதன் அல்ல. தமிழ் மொழியினதும் தமிழ் மக்களினதும் வளர்ச்சிக்கு அவசியமான பல செயற்பாடுகளை அவர் தொடக்கி வைத்தார். இவ் விதமான செயற்பாடுகளுக்கு அவசியமான பலஆக்கபூர்வமான, தீர்மானகரமான அறிவு சார் பங்களிப்புகளைச் செய்துள்ளார். அத்துடன் நிற்கவில்லை, அமைப்பு ரீதியான பங்களிப்புகளையும் செய்துள்ளார்.

இவர் தொடக்கிவைத்த செயற்பாடுகள் இன்னமும் முற்றுப் பெறவில்லை. அவற்றை தொடரவேண்டிய அவசியம் முன்பைவிட அதிகமாக இன்று உள்ளது. உதாரணமாக, தாய்மொழிக் கல்வி, தமிழ்ச் சொல்லாக்கம், பிறமொழி சாஸ்திரங்களை தமிழில்மொழிபெயர்த்தல், இசைத் தமிழையும், பாரம்பரிய இசைக் கருவியையும் வளர்த்தல், தூயதமிழ் பிரயோகம், சர்வ மத ஐக்கியம், சாதி அடிப்படையிலான சமுக சமத்துவம் கொடுந்தமிழை (மக்களின் பேச்சுவழக்குத் தமிழ்) நெறிப்படுத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

அவரைப் பற்றி நாம் வெளிக் கொண்டுவரும் விடயங்கள் அவரின் சரியையும் பிழையையும் கணக்கில் கொண்டு அவரை முழுமையாக நோக்கக் கூடியதாக இருக்கவேண்டும்; அவர் வாழ்ந்த காலத்துடன் வைத்து அவர் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்; அவரால் தொடக்கப்பட்ட பணிகளைத் தொடர்வதற்கு துணைபுரியக் கூடிய வளங்களை வளர்க்க கூடியதாய் இருக்க வேண்டும்.

'சாளரம்' இத்திசைவளியில் தனித்தும், கூட்டாகவும் இணைந்தும் தனது பங்களிப்பைச் செய்யும்.

## குறள் வெள்ளம்



## இடம் துணை நிற்கும்

பெரிய திட்டங்களைத் தீட்டி, பல்வகைப் படை கொண்டு பகைவர் முன்னேறி வருவர். ஆரம்பம் சுமுகமாகவே இருக்கும். தமது எண்ணம் நிறைவேறுவதாகக் கனவு காண்பர் அவர்கள்.

ஆனால் அவர்களுடன் மோதப் போபவர்களோ கலங்காது தமக்கு வாய்ப்பான இடம் அமையும்வரை காத்திருப்பர்; பதுங்கியிருப்பர்.

சரியான இடம் அறிந்து, சிந்தித்து இவர் செயற்பட ஆரம்பிக்கும்போது (துன்னியார் துன்னிச் செயின்) பகைவரினால் எதுவுமே செய்யமுடியாத நிலை ஏற்படும்.

வெல்ல நினைத்திருப்பவர்கள் தமது எண்ணம் இழப்பர். பெரும் சேதத்தைச் சந்தித்து தலைதெறிக்க ஓட்டம் எடுப்பர். இங்கே இடத்தின் அமைப்பு, சூழல் கைகொடுக்கிறது.

"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்"

— 0494
(இடமறிதல்)

' அம்பிகைபாகன் '

● மாணவர் செய்தவை

# கலைச் சோலை காலாண்டு கையெழுத்துப் பிரதி

கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தின் கையெழுத்துப் பிரதியான 'கலைச்சோலை' கிடைக்கப் பெற்றோம். அத்துடன் 87, 88, 89 ம் ஆண்டு 'கலைச்சோலை'களும் கிடைத்தன.

இந்திய இராணுவத்தின் கெடுபிடிகள் இங்கிருந்த காலகட்டத்திலேயே 'கலைச்சோலை' உருவானது. தர்மபுரம் மகா வித்தியாலய மாணவர்களின் நடவடிக்கைகளை இந்திய இராணுவம் அவதானித்து வந்தது. அதனாலோ என்னவோ 'கலைச்சோலைக்குள்ளிருந்த படைப்புக்களில் சமகால நிகழ்வுகளை அதிகம் காண முடியவில்லை.

அநேகமான சிறு கதைகளின் பாத்திரங்கள் வாழ்க்கையின் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக கொலை செய்யப்படுகிறார்கள் அல்லது தற்கொலை செய்து கொள்கிறார்கள். வாழ்வின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு இவை தான் வழிகளா?

மாணவ இளைஞர்களின் பார்வை புரட்சிகரமானதாகவும் யதார்த்தமானதாகவும் அமைதல் வேண்டும்.

இவ் விதழ்களில் நிறையவே அறிவியல் விடயங்கள் அடங்கியுள்ளது. பாட விதானத்திற்கு அவசியமான ஆய்வுக் கட்டுரைகளும், பாட விதானத்திற்கு அப்பால் மாணவர் அறிவை வளர்க்கக் கூடியதான கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கல்வி பற்றிய சிறப்புக் கண்ணோட்டம், குறிப்பிடத்தக்க சிறப்பான கட்டுரை எனலாம். தாம் வாழும் பிரதேசம் பற்றிய சுயமான ஆய்வுகளை மாணவர்கள் மேற்கொண்டு எழுதினால் 'கலைச்சோலை' மேலும் பொலிவுறும்.

இயற்கை அறிவியல், வரலாறு, கலை, இலக்கியம் பொழுது போக்குகள் என எல்லா அம்சங்களும் இணைந்து ஒவ்வொரு மலரும் தொகுக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

மாணவர்கள் மத்தியில் இலக்கிய ஆர்வம், எழுத்தாற்றல் என்பன நிறையவே வளர்ந்து வருவதை இவ்வாறான கையெழுத்துப் பிரதிகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

மாணவர்கள் பாடப்புத்தகங்களுக்குள் மட்டும் புதைந்து கிடக்காமல் வெளித் தேடல்களை வளர்ப்பதற்கும். வாசிப்பு. எழுத்தாற்றல் என்பனவற்றை ஊக்குவிப்பதற்கும் இவ்வாறான கையெழுத்துப் பிரதிகள் பெரிதும் உதவுகின்றன. சகல பாடசாலைகளிலும் இவ் விதமான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

குறிப்பு:—

மாணவர்கள் புதிதாக கையெழுத்துப் பிரதிகள் ஆரம்பிக்க விரும்பினால் சாளரம் அதற்கான ஆலோசனைகளை வழங்கும் ஏற்கனவே தொடங்கப்பட்ட பிரதிகளை எமக்கு அனுப்பி வைத்தால் அதனை சாளரம் அறிமுகம் செய்து வைக்கும்.

## குறுக்கெழுத்துப் போட்டி

இல. 2ற்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| X | 1 கி | ர | ந் | 8 த | ம் | X | 16 கு |
| 2 கு | ரு | X | X | க் | X | 14 றி | 15 க |
| 3 பு | ஷ் | X | X | 9 க | ம் | ப | ன் |
| X | ன் | 6 ன | 7 சீ | X | X | ன் | X |
| 4 க | X | 5 மு | க் | கை | 12 யா | X | 13 சி |
| ல் | ண | ர் | 11 கி | X | த் | X | ல |
| லெ | X | X | 10 ய | ந் | தி | ர | ம் |
| 18 ட் | டா | 17 மோ | ர் | X | ரை | X | பு |

கிட்டிய விடையைப் பெற்ற 1வது பரிசு பெறும் மாணவன்.

மகாலிங்கம் நிரேஷ்குமார்
(ஆண்டு - 11)
பிரதான வீதி - சுழிபுரம்

இவருக்கான பரிசு காலக்கிரமத்தில் சேர்ப்பிக்கப்படும்.

# விளையாட்டும் ஆரோக்கியமும்

> 'விளையாட்டு மைதானங்களையும் பயிற்சி நிலையங்களையும் நிறுவுவதன் மூலம் வைத்தியசாலைகளை குறைக்கமுடியும்.'

மனிதனுடைய வளர்ச்சி என்பது, ஒருவனுடைய உடல், உள வளர்ச்சியையே குறிக்கிறது. தனிமனிதர்களின் ஒட்டு மொத்தமான இவ்வளர்ச்சியே சமூக வளர்ச்சியாகவும் கருதப்படுகிறது. இவற்றில் உடல்ரீதியான வளர்ச்சிக்கு விளையாட்டுக்களும், உடற்பயிற்சியும் மிக அவசியமானது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றாகும். விளையாட்டுகளின்போது மனிதனுடைய தசை-நார் வளர்ச்சி, குருதி சுற்றோட்ட விருத்தி சுவாச விருத்தி என்பன ஏற்படுவதால் இயல்பாக அவனுடைய உடல் ரீதியான வளர்ச்சி விருத்தியாகிறது. இதேபோன்று விளையாட்டுக்களில் ஈடுபடுவதால் மூளைக்கு உற்சாகம் ஏற்படுகிறது. அத்தோடு பொறுமையும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கும் வளர்கிறது. அதுமட்டுமல்ல, சட்டத்தை மதிக்கும் பண்பும், தலைமைக்கு கட்டுப்படும் இயல்பும் பரந்த மனப் பான்மையும், சகோதரத்துவமும் வளர்க்கப்படுகிறது. இவற்றின் மூலம் மனிதர்களுடைய உளம் பண்பட்டு, அவர்களின் மனப் பாங்கு உயர்வடைகிறது.

ஆரம்ப காலத்தில், மனிதனுடைய வீரத்தை மதிப்பிடுவதற்கு யுத்தங்கள் களங்களாய் இருந்தன. இவற்றில் வீரர்கள் தங்கள் திறனை, வீரத்தை நிருபித்தார்கள். ஆயினும் யுத்தம் அற்றகாலங்களில் வீரர்கள் தமது வீரத்தையும், திறனையும் நிருபிப்பதற்கு விளையாட்டு போட்டிகளை பயன்படுத்தினார்கள். சமுதாயமும் அவர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. பண்டையநாட்களில் எமது முன்னோர்கள் கூட, குதிரையேற்றம், மஞ்சி விரட்டுதல் (மாடுகளை அடக்குதல்) என்பவற்றின் மூலம் போர் இல்லாத காலங்களிலும் வீரவிளையாட்டுக்களை நிகழ்த்தியதாக வரலாறு உண்டு. எமது தேசத்தில் கூட குறிப்பாக தென் தமிழீழத்தில் கொம்பிழுத்தல் இரண்டு கிராமங்களுக்கிடையே நடந்ததாக வரலாற்று குறிப்புண்டு. இவ்வாறு விளையாட்டுக்கள் கூட எமது பாரம்பரிய பண்பாட்டுக் கோலத்துள் மிகுந்த செல்வர்சகை செலுத்தியிருந்ததை அறியக் கூடியதாக உள்ளது. திருவிழாக்கள், புதுவருடம், பொங்கல் போன்ற கொண்டாட்ட நாட்களில் இவைகள், எமது மக்களால் விளையாடப்பட்டு வருவதை இன்றும் கூட காணக் கூடியதாக உள்ளது. எனவே எமது பண்பாட்டு அம்சத்தில் கலை நிகழ்ச்சிகள் எவ்வளவு செல்வாக்கை செலுத்தினவோ அவ்வளவு செல்வாக்கை விளையாட்டுக்களும் செலுத்தியுள்ளன என்பதை அறியக் கூடியதாகவுள்ளது.

எமது பாரம்பரிய விளையாட்டுக்கான கிளித்தட்டு (தாச்சி) வார் ஓடுதல் என்பன மிகுந்த உடற் திறனையும், நுட்பத்தையும், மகிழ்வையும் கொடுக்கக் கூடிய விளையாட்டுகளாகும். ஆயினும் இவை வளர்ச்சியடையாமல், இன்றும் தாழ்ந்த தரத்திலேயே உள்ளது. இந்தியமக்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான 'கவடி' தேசிய விளையாட்டாக வளர்ந்து, ஆசியவிளையாட்டுப் போட்டிகளில் ஒரு நிகழ்ச்சியாக சேர்க்கப் பட்டு இன்று ஒரு சர்வதேச நிகழ்ச்சியாக உயர்ந்துள்ளது. இவ்வாறே சிங்களவரின் 'எல்லே' ஒரு தேசிய நிகழ்ச்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே நாமும் கவடியை எமது தேசிய விளையாட்டாக உயர்த்தி கொள்வது எமது பாரம்பரியத்திற்கு செழுமை சேர்க்கும் ஒரு செயலாகும்.

சர்வதேச அரங்கில் விளையாட்டுக்கள் ஒரு தேச மக்களின் ஆரோக்கியத்தை, அபிவிருத்தியை அளவிடும் அளவு கோலாக அமைந்துள்ளது. உலகில் 'ஜமேர்க்கா' போன்ற சின்னஞ்சிறிய நாடுகள் கூட சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற்று தடாக்கென்று ஒரு இடத்தை நிலைநாட்டியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. விளையாட்டு மைதானங்களையும் பயிற்சி நிலையங்களையும் நிறுவுவதன் மூலம் வைத்தியசாலைகளை குறைக்கமுடியும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். இன்றும் கூட விளையாட்டுக்கு பிரதியீடான மருந்து உலகத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை என்றே கூறப்படுகிறது. அதுமட்டுமல்ல விளையாட்டுக்கள் மன இறுக்கத்தை நீக்கி மகிழ்வையும் மன ஓய்வையும் கொடுக்கும் காரணியுமாகும். எனவே இன்று போர் சூழ்நிலையில் வாழும் எமது மக்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் எவ்வளவு மன இறுக்கத்துடன் வாழுகிறார்கள் என்பதை நாம் அறிவோம். இவர்களுக்கு வடிகாலாக அமையக் கூடிய விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். இளைய தலைமுறையினரை தேவையற்ற போதைப் பழக்கத்திற்கும், கலாசார சீரழிவுக்கும் இட்டுச் செல்லும் பழக்கங்களில் இருந்து காப்பாற்றக் கூடிய சக்தி கலை, இலக்கியங்களிலும் விளையாட்டுக்களிலும் உண்டு என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே விளையாடுவோர் அனைவருக்கும் பயனளிக்க கூடியதும் செலவு குறைவானதுமான விளையாட்டுகளை தெரிவு செய்து அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியமாகும்.

அ. அன்ரன் அன்பழகன்
கிளி/ உருத்திரபுரம் ம.வி.

# காலத்துடன் இணைதல்

மக்கள் தங்களது நியாயமான உரிமைகளைப் பெற்று சுதந்திரமாக வாழ்வதற்கும், அடக்குமுறைச் சக்திகளின் ஆதிக்கத்திலிருந்து மீள்வதற்கும் போராடித்தான் ஆகவேண்டும் என்கிறநிலை இன்று உலகில் தவிர்க்க முடியாததாகி விட்டது.

இவ்வாறு போராடும் மக்கள் போராட்டத்துடன் சங்கமிப்பதில் இருவகைப்படுகின்றனர்.

ஒன்று அகவயம்
மற்றது புறவயம்.

அகவயப்பட்ட போராட்டம் என்பது சிந்திக்கும் ஆற்றலுடன் தொடர்புடையது. அடக்குமுறையாளரின் திட்டம் எத்தகையது? எதிரியானவன் தமது தேவைக்காக எந்தெந்த விதங்களில் அடக்கப்படும் மக்களைப்பயன் படுத்துவான் அற்பமான சலுகைகளைத்தந்து அடிமைப்படுத்த முற்படும் அவனது தந்திரம் எத்தகையது? என்பனவற்றையெல்லாம் முதலிலேயே சிந்தித்துணர்ந்து ஒரு போராட்ட வடிவத்தினை முன்னெடுத்தல் அல்லது, போராட்டத்தை முன்னெடுக்கும் சக்தியுடன் இணைந்து கொள்ளுதல் என்பது இதுவாகும்.

அடக்கு முறைகளினால் நேரடியாகப் பாதிப்புற்று இழப்புகளையும், இன்னல்களையும் எதிர்கொள்ளும் போது கிளர்ந்தெழுந்து போராடுவது புறவயப்பட்ட போராட்டமாகும்.

பொதுவாகவே எல்லாப் போராட்டங்களிலும் மக்கள் தொகையில் அதிகமானோர் இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர்.

தமிழீழ மக்கள் தொகையிலும் அதிகமானோர் இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

முதலாவது வகையினர் மிகக் குறைவாகவே!

இதேநேரம், இந்த இருவகையிலும் இல்லாதோரும் எம்மத்தியில் உள்ளனர் என்பதையும் இங்குகுறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

இவர்கள் எந்நிலையிலும் போராட்டத்தில் பங்கு கொள்ளாமல் விலகி நிற்பவர்கள்.

போலியான கனவுலகில் மிதப்பவர்கள்.

சொந்த சுகவாழ்வினை மட்டுமே இலக்காகக் கொண்டு இயங்குபவர்கள். இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என்ற நிலைப்பட்டவர்கள்.

சொந்த மண்ணில் வாழப் பயந்தவர்கள். அற்ப சுகங்கள் கிடைத்தால் அடிமைப்பட்டாயினும் எந்த மண்ணிலும் வாழலாமென பறப்பவர்கள்!

இவர்களை விடுவோம்;
அவர்களைப் பார்ப்போம்.

அகநிலைப்பட்டோ, புறநிலைப்பட்டோ போராட்டத்துடன் இணைந்து கொள்ளும் போது அவர்கள் இரு வகையினரும் ஒருவகையினராகவே மாறிவிடுகின்றனர்.

இந்த மக்கள் போராட்ட வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவர்கள்.



**விவேக்**

நமது மண்ணில் இப்போது போராட்டத்தில் மக்கள் இணைகிறார்கள் என்று சொல்வதை விட போராட்டம் தான் மக்களை இணைத்துக் கொள்கிறது என்று சொல்வதே பொருத்தமென்று எண்ணத் தோன்றுகிறது.

இங்கு மக்களால் ஒரு காலமாற்றம் உருவாக்கப் படவில்லை. இந்தக் காலம்தான் மக்களை போராட்டத்திற்கேற்றவாறு உருவாக்கியுள்ளது.

எதிரியினால் ஏற்படுத்தப்பட விருக்கும் பல்வேறு விதமான துன்பங்களையும் எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கான தயாரிப்புகள் எதுவும் முன்கூட்டியே கவனிக்கப்படவில்லையாயினும், இன்னல்கள் நேரடியாக தாக்கிய பின்னர் தான் அதனை எதிர்கொள்வதற்கு மக்கள் பழகிக் கொண்டனர்.

காலத்தோடு இணைதல்; இசைவாக்கமடைதல் என்பது தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாகும்.

ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

போக்குவரத்து வசதிகள் உள்ள சாதாரண ஓர் வேளையில் வவுனியா போன்ற தூர இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஒருவன் சைக்கிளில் பயணம் செய்கிறானென்றால் அது ஓர் அசாதாரண நிகழ்வு;

போக்குவரத்து வசதிகள் இல்லாத இக்காலகட்டத்தில் எல்லோரும் சைக்கிள்களின் துணையுடனேயே பயணம் செய்யும் வேளையில் ஒருவன் பஸ்ஸை எதிர் பார்த்து காத்திருக்கிறான் என்றால் அதுவும் ஒரு அசாதாரண நிகழ்வுதான்.

காலத்துடன் இணைதல் என்பது சாதாரணநிகழ்வே!

எனவே, இப்போராட்டச் சூழலோடு ஒருவன் தன்னை எந்த விதத்திலும் இணைத்துக் கொள்ளாமலிருந்தால் அவனை அசாதாரண மனிதனாகவே கணிப்பிட வேண்டியிருக்கும்.

வன்னி போன்ற விவசாய பகுதிகளில் வாழும் மக்கள் உயிரைக்கொடுத்து நிலங்களில் உழைப்பதை இன்று பார்க்கிறோம்.

உழவு, நீரிறைப்பு போன்றவற்றிற்கு எரிபொருள் இல்லை. இயந்திரங்கள் இதனால் செயலிழந்த நிலையில்.

அந்த விவசாயிகள் மாடுகளைப் பூட்டியும் சொந்த உடலுழைப்பாலும் உற்பத்திப் போர்முனையில் நின்று போராடுகின்றனர்.

பசளை, கிருமி நாசினி போன்ற தடைகளை எதிர் கொள்ள ஏதேதோ மாற்றுத் திட்டங்களையெல்லாம் மேற்கொண்டு உழைக்கின்றனர்.

இவர்களெல்லாம் இந்த மண்ணோடு, போராட்டத்தோடு இணைந்தவர்கள் தாம்!

வவுனியாவிலிருந்து சுமக்க முடியாத இரண்டு மூன்றென மூட்டைகளை ஏற்றிக்கொண்டு யாழ். நோக்கி வரும் சைக்கிள் அணிகளை அன்றாடம் பார்க்கிறோம்.

வெறும் இலாபநோக்கோடு வியாபாரம் கருதிதான் இவர்கள் இவ்வாறு வருகிறார்கள் என்று இவர்களின் உழைப்பை எவரும் கொச்சைப்படுத்திப் பார்க்கக் கூடாது.

பாரமான மூட்டைகளை, உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு பலமைல்கள் வெயிலில் காய்ந்து கடந்து ..., குன்றும் குழியுமான பாதை வழியே விழுந்தெழும்பி..., மணல் வெளியில் புதைந்து சரிந்து... காரிருளில், எதிர்க்காற்றில். சைக்கிள்களை அணைத்து உருட்டி ... வானவூர்திகளின் தாக்குதல்கள் மத்தியில் உயிரையும் பணயம் வைத்து அவர்கள் மேற்கொள்ளும் அந்த உழைப்பினை வெறும் வியாபாரம் என கொச்சைப்படுத்த முடியுமா?

இவ்வாறு எத்தனையோ வழிகளில் இப்புதிய காலவோட்டத்துடன் மக்கள் இசைவாக்கமடைந்துள்ளனர்.

போராட்டம் மேலும் மேலும் முனைப்படைய வயது வித்தியாசமின்றி முதியவர்களும் ஆயுதமேந்த முன்வருவதை இப்போது பார்க்கிறோம்.

போராட்ட எழுச்சியின் பரிணாமத்தோடு மக்களின் இணைவு அதிகரிக்க -

இலக்கு மிக அருகே இருப்பது தெரிகிறது.

நிலவு வரும்

# புதிதாய் எழுதல்

ஓர் பிரளயத்தின் பின்வந்த
அமைதிவேளையில்
துயர் சுமந்த நெஞ்சினொடு
நடந்தேன்.

எனது கிராமத்து வாசலில் ...
ஒடிந்த மரக்கிளையொன்றிலமர்ந்து
குயிலொன்று சோகம்பாடியது.

விதவைப் பெண்ணொருத்தியின்
விசும்பலாய் ஒலி செய்து
மெலிந்து நடந்தது
வாய்க்கால் நீர்

வீழ்ந்து சிதறிக்கிடந்த
வேப்பமர இலைகளின் புருவங்களில்
இரத்தக்கறை.

இடிபாடுகளிடையே
முதுகு முறிந்த
பெரு மரங்கள்!

தென்றல் மட்டும்
தோழனொருவனைப் போல்
தோள்தொட்டு வருடியது

அக்கம் பக்கம் எவருமின்றி
அநாதரவாய் - அகதியாய்
எனது கிராமம்.

புதைவுகளுக்குள்ளிருந்து
புதிய சிலதளிர்கள் மட்டும்
பூத்திருந்தன!

ஆர்வத்துடன்
உற்றுப்பார்த்த என்னுடன்
அவை தத்துவம் பேசின!

சிதைவுகளுக்குள்ளிருந்து
புதிதாய் எழுதல் பற்றி!

# முதலாவது அணுகுண்டு

# அர்த்தமற்ற மனித அழிப்பு

1945 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6 ம் திகதி அதிகாலை 2.45 மணிக்குப் பசுபிக் சமுத்திரத்திலுள்ள தினியன் தீவிலிருந்து அமெரிக்காவின் பி. 52 விமானமொன்று புறப்படுகின்றது. அதைத் தொடர்ந்து இரண்டு பி. 52 விமானங்கள் ஒவ்வொன்றும் இரண்டு நிமிட இடைவெளியில் புறப்படுகின்றன.

ஹிரோஷிமா நகரின்மீது உலகின் முதலாவது அணுக்குண்டைப் போடுவதற்காகவே இம் மூன்று விமானங்களும் புறப்பட்டன.

கேணல் போல் டபிள்யூ. ரிபெட்ஸ் முதலாவது விமானத்தில் சென்றார். அதுவே குண்டு போட வேண்டிய விமானம். மற்றைய இரண்டு விமானங்களுக்கும் வெவ்வேறு பணிகள் ஒதுக்கப் பட்டிருந்தன. ஒன்று விசேட கருவிமூலம் குண்டுவெடிப்பின் சக்தியை அளவிட வேண்டும். மற்றது வானிலிருந்து குண்டுவெடிப்பின் விளைவுகள் பற்றிய புகைப்படங்களைப் பிடிக்க வேண்டும்.

மூன்று விமானங்களும் ஹிரோஷிமா நகரின் வான் வெளிக்குள் நுழைந்த போது அந்நகர மக்கள் தங்களுக்கு ஆபத்து வருகின்றதென அறிந்திருக்கவில்லை.

சரியாகக் காலை 8.15க்குக் குண்டு வெடித்தது. ஹிரோஷிமா நகரம் சுடுகாடாகியது. அலுவலகங்களுக்குச் செல்வோரும், பாடசாலைகளுக்குச் செல்வோருமாகச் சனசஞ்சாரம் மிகுந்த நேரமாகையால் பல்லாயிரக் கணக்கானோர் கருகி மடிந்தனர். கட்டடங்கள் சாம்பல் மேடுகளாயின. 94,000 பேர் உடனடியாக இறந்திருக்கலாம் எனக் கணிப்பிடப் பட்டுள்ளது. மரணமாகாது தப்பியவர்கள் அணுத் தாக்கத்தினால் பல விதமான நோய்களுக்கு உட்பட்டு வருந்துகிறார்கள்.

பெரும் பேரழிவை உண்டுபண்ணிய இக் குண்டு வீச்சு அன்றைய நிலலயில் தவிர்க்க முடியாததா?

அணுகுண்டு தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகிய பின்னணியையும், அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களையும் அறித்து கொள்வதன் மூலம் இதற்கான விடையைக் காணலாம்.

யுறேனியத்தை அடிப்படையாகக் கொண்டு அணுக்குண்டு தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டென்று 1939 ம் ஆண்டளவில் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். அப்போது அமெரிக்காவில் வசித்த பல முன்னணி விஞ்ஞானிகளின் சார்பில் அல்பேர்ட் ஐன்ஸ்ரீன் அமெரிக்க ஜனாதிபதி றூஸ்வெல்டுக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில், அணுக்குண்டு தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை விளக்கியதுடன், அத்தகைய பயங்கர ஆயுதம் ஹிட்லரின் கைக்கு எட்டுமேயானால் அதனால் மனித இனத்துக்குப் பேரழிவு ஏற்படும் எனவும் கூறியிருந்தார்.

அந்த நேரம் அது றூஸ்வெல்டின் கவனத்தை ஈர்க்கவில்லை.

ஜெர்மனியர்கள் அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற விடயம் சில மாதங்களுக்குப் பின் விஞ்ஞானிகளுக்கு எட்டியதைத் தொடர்ந்து 1940, மார்ச் 7 ந் திகதி இன்னொரு கடிதத்தை ஐன்ஸ்ரீன் றூஸ்வெல்ருக்கு அனுப்பினார். தான் பிறந்த நாட்டில் அணுக்குண்டு தயாரிப்பதற்கான முயற்சிகள் மேற்

மூன்று விமானங்களும் ஹிரோஷிமா நகரின் வான் வெளிக்குள் நுழைந்த போது அந் நகர மக்கள் தங்களுக்கு ஆபத்து வருகின்றதென அறிந்திருக்கவில்லை.

கொள்ளப்பட்டு வருவதை அக் கடிதத்தில் விளக்கியிருந்தார். இதன்பின் ஜனாதிபதி அணுக்குண்டு தயாரிப்பதற்கான அனுமதியை வழங்கியதோடு, ஜேர்மனியின் ஆராய்ச்சி நிலையத்தைக் கண்டுபிடித்து அழிக்கும் உத்தரவையும் பிறப்பித்தார்.

ஜெர்மனியின் அணுக்குண்டு தொடர்பான ஆராய்ச்சி நிலையத்தைக் கண்டுபிடிப்பதற்காக அமெரிக்க இராணுவப் புலனாய்வுச் சேவையில் 'அல்சஸ்' என்ற ஒரு தனிப்பிரிவு உருவாக்கப்பட்டது. ஒரு மாதத்துக்குள் ஜெர்மனியின் ஆராய்ச்சி நிலையம் விமானத் தாக்குதல் மூலம் முற்றாக அழிக்கப்பட்டது.

இப்போது அணுக்குண்டு தயாரிக்கவேண்டிய அவசியம் இல்லையென விஞ்ஞானிகள் கருதினர். ஆனால் அமெரிக்க அரசாங்கம் அத் திட்டத்தைக் கைவிட விரும்பவில்லை.

1945 ஏப்ரல் 12 இல் றூஸ்வெல்ட் இறந்ததும் ஹிரிட்ரூமன் ஜானாதிபயாகப் பதவியேற்றார். அவரும் அணுக்குண்டு தயாரிப்பில் அதிக அக்கறை செலுத்தினார். யுத்தத்துக்குப் பிந்திய உலகின் தலைமைப் பதவியை அமெரிக்கா வகிப்பதற்கு இந்த அணுக்குண்டு பெரிதும் உதவுமென்பது அவரது நம்பிக்கை.

1945 யூன் 16ம் திகதி காலை 5.30 மணிக்கு அலமோகோடோ பரீட்சை தளத்தில் அணுகுண்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. எதிர்பார்த்ததிலும் பார்க்கத் திருப்தி அளித்தது. நேச அணித் தலைவர்களது மகாநாட்டுக்காகப் பொட்ஸ்டாம் சென்றிருந்த ட்ரூமனுக்கு இச்செய்தியை உடனடியாக அறிவித்தனர்.

அப்போது யப்பானுடனான யுத்தம் முடிவுறவில்லை. ஆனால், தோல்வியடையப் போவதை உணர்ந்த யப்பான் சரணடையும் நிலையிலேயே இருந்தது.

'' த வைற் ஹவுஸ் இயர்ஸ்'' என்ற நூலில் டுவைற் ஐஸனோவர் பின்வருமாறு கூறுகின்றார். ''அந்த நேரம் ஆகக் குறைந்தளவு கௌரவ இழப்புடன் சரணடைவதற்கான வழிகளை யப்பான் தேடிக் கொண்டிருந்தது என்பதே எனது நம்பிக்கை,''

யுத்தத்தின் போது ஐஸனோவர் ஐரோப்பாவில் அமெரிக்கப் படைகளின் பிரதம தளபதியாகக் கடமையாற்றியவர்.

''சோவியத் யூனியன் முழுமையாக யப்பானுக்கு எதிரான யுத்தத்தில் கலந்து கொள்வது பூரணதோல்வி தவிர்க்க முடியாதது என யப்பானை நம்ப வைக்கும்'' என்று அமெரிக்கக் கூட்டுப் புலனாய்வுக் குழு கூறியிருந்தது.

சோவியத் யூனியன் யுத்தத்தில் கலந்து கொண்டால் யப்பான் விரைவில் சரணடையும் என்ற கருத்தை அமெரிக்க இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜோர்ஜ் மார்ஷல் யூன் மாதம் ஜனாதிபதிக்குத் தெரிவித்திருந்தார்.

ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டு மூன்று மாதங்களின் பின் தான் யப்பானுக்கு எதிரான யுத்தத்தில் கலந்து கொள்வதாக யால்டா மகா நாட்டில் சோவியத் யூனியன் அளித்த வாக்குறுதியை பொட்ஸ்டாம் மகாநாட்டின் ஆரம்பத்தில் அது உறுதிப் படுத்தியது. மூன்று மாத காலம் ஒகஸ்ட் 8- ந் திகதியுடன் முடிவடைகின்றது.

எனவே, அணுக்குண்டைப் பயன்படுத்தாமலேயே ஒகஸ்ட் 8 - ந் திகதிக்குப் பின் எந்த நேரமும் யப்பான் சரணடையலாம் என்ற நிலையே நிலவியது.

இது ட்ருமனுக்குத் தெரியாததல்ல. அப்படியிருந்தும் யப்பான் மீது அணுக்குண்டைப் போடுவதற்கு அவர் தீர்மானித்தார். அமெரிக்காவிடம் பயங்கர அணுக்குண்டு உண்டென்பதை உலக நாடுகளுக்குக் காட்டி அவற்றை அச்சுறுத்த வேண்டும் என்பதே காரணம்.

குண்டு போடுவதை நியாயப் படுத்துவதற்கான 'காரணமும்' உருவாக்கப் பட்டது.

யப்பான் உடனடியாகச் சரணடைய வேண்டுமென்ற இறுதி எச்சரிக்கைக் கடிதமொன்று அமெரிக்கா, பிரித்தானியா, சீனா ஆகிய நாடுகள் கையொப்பமிட்டு யூலை 27 ந் திகதி யப்பானுக்குக் கொடுக்கப்பட்டது. சரணடைந்த பின் யப்பான் சக்கரவர்த்தியின் நிலை என்ன என்பது பற்றி அதில் குறிப்பிடப் படாததால் யப்பான் சரணடைய முன் வரவில்லை.

யப்பான் சரணடைந்தால் அணுக் குண்டைப் பாவிக்க முடியாது. சரணடையாவிட்டால் யப்பானைப் பணிய வைப்பதற்காகவே அணுக் குண்டு போடப்பட்டதென உலகுக்குக் கூறலாம்.

இதற்காகவே, ஆவணத்தைத் தயாரித்த அமெரிக்க அதிகாரிகள் சக்கரவர்த்தியின் நிலை பற்றி அதில் குறிப்பிடாது விட்டனர் என சொல்லப்படுகின்றது.

— சிவா சுப்பிரமணியம்.


## தாய்மொழி மூலம் உணர்வதே சிறப்பு

நம்மவர்க்குள் ஆங்கிலம் படித்தவர் பலர் தொல்காப்பியம் அறிந்திலர். ஆனால் பிஷப்கால்வேல், அந்நூலைப் பயின்று, ஆராய்ந்து அதன் நுட்பங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் எழுதி இருக்கின்றார். மாணிக்கவாசகருடைய திருவாசகத்தின் உள்ளுறையை ஆங்கிலம் பயின்ற நம்பவர் அறியவிரும்பும்போது, டாக்டர் போப்பினுடைய மொழி பெயர்ப்பை தேடிப்பார்க்கிறார்கள். நம்மாழ்வார் திருவாய் மொழியின் கருத்தை அறிய வேண்டுமோனால், சிலர் ஆங்கில மொழி பெயர்ப்பைத் தடவுகிறார்கள் இன்னும், திருவள்ளுவர் திருக்குறளை நேராகத் தமிழில், ஆங்கிலம் பயின்ற தமிழர்களில் பலர் படிக்கிறாரில்லை.

நம் நாட்டுப் பெரியோர்கள் அருளிய உண்மைகளைத் தாய்மொழி வாயிலாக உணரும் ஆற்றலையும் வன்மையையும் இழந்து அவைகளை வேறு மொழியூடாக அறிந்துகொள்ளும் நிலையை நாம் அடைந்திருக்கின்றோம் அரும் பெரும் நூல்களின் கருத்துக்களை நாம் செவ்வனே உணர வேண்டுமோனால், அவைகளைத் தாய் மொழி மூலம் உணர்வதே சிறப்பு என்கிறார்கள் மகான்களும் கற்றறிந்தவர்களும்.

ஜெயராசா கோகுலன்
இணுவில்

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 3



குறிப்பு: குறுக்கெழுத்துப்போட்டி 1ம், 2ம் பகுதிகள் வரலாறு சம்பந்தப்பட்டதாகவே அமைந்திருந்தன. அவைமிககடினமானதாய் இருந்தன என்ற வாசகர்களின் கருத்தைக்கணக்கில்கொண்டோம். ஆகவே இனிவரும் குறுக்கெழுத்துப் போட்டிகள் அநேகமாகஇதற்கு நேர்முந்திய இதழின் விடயதானங்களுக்குள் உள்ளடங்கியுள்ள சொற்களால் ஆக்கப் பட்டவைகளாகவே இருக்கும்.

இடமிருந்து வலம்

1. ஒரு தலைவன் அல்லது ஓர் அதிகாரி தனக்கு கீழ் உள்ளவனின் திறமை தனது திறமையைவிட உயர்ந்தது என்பதைப் புரிந்து அதைப் பாராட்டுவது இத் தன்மை பெற்ற குணாம்சம் எனப்படும்.

2. இது ஒருவகை இசைக்கருவி. யுத்த காலத்தின் போதும் முழங்கப்படும்.

3. ஆனையிறவு போரின்போதான ஊரடங்குச் சட்டத்தால் நடைபெற முடியாதுபோன சோதனையின் முன்னெழுத்துக்கள் குழம்புண்டு கிடக்கின்றன.

4. நீரின் இந்த ஒரு வடிவம், நீரில் கப்பல்போல் மிதக்கும், இதில் ஏற்படும் வேறுபாடே அதற்கான காரணமாகும்.

5. பயன்படும் காரியம் செய்யாதுவிட்டாலும் பறவாயில்லை. யாருக்கும் இதைச் செய்யாதே.

6. அதிர்ச்சிதரும் செய்திகளைக்கேட்டதும் இந்த ஓர் எழுத்துக்கொண்ட அவயவம் ஓடாது விட்டுவிடும் என பொதுவாக கூறுவார்கள்.

8. வானமண்டலத்தில் இருக்கும் இந்தப் படையில் ஓட்டை விழுந்து விட்டதாம்.

9. ஓசோன் வாயுவைச் சிதைக்கும் வாயுக்களை உருவாக்கும் இவ்வகைப் பிராணியின் இளசுகள் இவ்விதந்தான் கத்தும் என சாதாரணமாகக் கூறுவார்கள் வலமிருந்து இடமாக எழுத்துக்கள் குழம்பியுள்ளன.

12. போர் என்று ஆரம்பித்துவிட்டால் இதனை கட்டிவளர்ப்பதும் இதனைப் போசிப்பதுமே ஏனைய அனைத்து சமூகத்தேவைகளிலும் விட முதன்மைபெற்று விடுகிறது.

15. கவிஞர் காசி ஆனந்தனின் உணர்வுகளின் சமூக பின்னணியை ஆக்குவதில் கொழும்பிலும் தமிழீழத்தின் பலபகுதிகளிலும் நடந்த இந்த போராட்டம் பிரதான பங்கு வகித்தது. அப்போராட்டத்தின் முதல் சொல் விடுபட்டுள்ளது,

16. இது திண்டி விஷமானால் ஆங்கில (அலோபதி) வைத்தியர்களின் சிகிச்சையைவிட நாட்டு வைத்தியர்களின் சிகிச்சையே அதிக பலனளிக்கின்றது.

19. மக்களுக்கெதிராக இச் சுமை மிக அதிகமாகச் சுமத்தப்பட்டால் மக்கள் தம்மை ஆள்வோர்களுக்கு எதிராக கிளர்ந்தெழுவார்கள் என்பதற்கு பிரான்சிய புரட்சி ஒரு படிப்பினையாகும். இது வலமிருந்து இடமாக நிற்கிறது.

20. ஆனையிறவுப் பகுதியில் இராணுவத்தளம் அமைப்பதன் மூலம் சிறிலங்கா இராணுவம் தமிழீழ பிரதேச இதைத் தடுப்பதையும் தனது நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டுள்ளது. இச் சொல் வலமிருந்து இடமாகவுள்ளது.

மேல் இருந்து கீழ்.

1. பரீட்சை எழுதியவன் இதை எதிர்பார்த்துக் காத்திருப்பான்.

3, பல நற்குணவியல்புகளைக் கொண்டுள்ள இந்தப் பாணம் சில மனிதர்களின் தவறான பாவனை முறையால் மனிதர்களின் வெறுப்பை சம்பாதித்துள்ளது.

5. நண்பர்களிடையே தோன்றும் பிரச்சனைகளைத் தீர்க்க கத்தியை இது செய்யக் கூடாது புத்தியை இது செய்யவேண்டும்.

6. அந்நியர்களால் உருவாக்கப்பட்டு அவ் அந்நியர் களாலேயே இயக்கிவைக்கப்படும் அரசாங்கங்களை இவ்வித அரசாங்கங்கள் என அழைப்போம்.

7. இது உள்ளவன் பலமான் என்பது ஒரு பழமொழி கடைசிச் சொல் தவறிவிட்டது.

8. இவனின் பேனாவின் பதிவுகளை விளங்கிக்கொள்ள மொழியறிவு தேவையில்லை. கீழ் இருந்து மேலாக நிற்கிறது.

9. இந்த மிருகத்தை தெய்வம்போல் மதிப்பார்கள். அதேபோது ஒரு மனிதனை இழிவாக ஏசுவதற்கும் இதே பெயரையே பயன்படுத்துவார்கள்.

10. பௌத்த மதத்தின் ஊடாக இலங்கைக்கு அறிமுகமான மொழி.

11. பல்வேறு வகையான சமூக கட்டுப்பாடுகள் இது சேரும் சுதந்திரத்தை மனிதர்களிடையே கட்டுப்படுத்தியுள்ளது. ஆனால் பறவைகள் இதில் சுதந்திரமானவை என்பது கவிஞர்களின் வர்ணிப்பு.

12. ஒருவன் மிக அவதானமாக விழித்திருந்தான் என்பதை எடுத்துக்காட்ட இது கொட்டாது விழித்திருந்தான் என உவமானம் கூறுவார்கள். சொல் கீழ் இருந்து மேலாக நிற்கிறது.

13. ஒரு காவிய நாயகனாக வர்ணிக்கப்படும் இவனை தன் மனைவிமேல் சந்தேகப்படும் ஒரு சந்தேகப் பிராணியாக பெண்விடுதலை விரும்பிகள் நோக்குகிறார்கள்.

14. தண்ணீரை தமக்கு மிக அண்மையில் கொண்டு வர இது பயன்படுத்தப் படுகின்றது. இதே பேரில் உள்ள ஒரு பொருள் புகைப் பிடிப்பவர்களாலும் பயன் படுத்தப்படுகின்றது.

16. ஓசோனில் மூன்று இதுகள் உண்டு.

17. சிவன் கழுத்தில் இருக்கும் பாம்பு இவனைப் பார்த்துக் கேட்டது ''நண்பா சௌக்கியமா''? என்று அதற்கு இவன் சொன்னானாம் ''இருக்கும் இடத்தில் இருந்து விட்டால் எல்லாம் சௌக்கியமே'' என்றும் கீழ் இருந்து மேலாக நிற்கிறது.

18. மலையகத் தமிழர்களின் தேசிய இன தனித்துவத்தை ஏற்றுக்கொள்ளாத பல 'தமிழர்கள்' இன்னமும்கூட அவர்களை இந்தத் தமிழர்கள் என்றே அழைக்கிறார்கள்.

## குவிஸ்லிங்

குவிஸ்லிங் (Quisling) என்ற ஆங்கிலப் பதம் தனது சொந்த நாட்டுக்குத் துரோகமிழைத்து எதிரிகளுடன் ஒத்துழைக்கும் தேசத்துரோகியைக் குறிக்கின்றது.

இது ஆங்கிலச் சொற்கூட்டத்தில் இடையிலே சேர்ந்த ஒரு பதமாகும்.

1940ம் ஆண்டு ஏப்பிரல் 9த் திகதி ஜெர்மனி நோர்வே தேசத்துக்குத் துரோகமிழைத்து ஜெர்மன் படைகளுடன் ஒத்துழைத்தான், நோர்வேயில் ஜெர்மனி அமைத்த பொம்மை அரசாங்கத்தின் தலைவனாகவும் இருந்தான்.

இத்தேசத்துரோகியின் பெயர் தேசத்துரோகிகளைக் குறிக்கும் ஆங்கிலப் பதமாக இப்போது வழக்கிலுள்ளது.

## எப்படி மரியாதை?

பெரியார் இ. வெ. ரா வுக்கு முன்னால் ஒருநாள் ஒருவன் காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டிருந்தான். அதைக் கண்ட அன்பர் ஒருவர் உங்களுக்கு மரியாதை கொடுக்காமல் காலுக்கு மேல் கால் போட்டிருக்கிறானே எனச் சுட்டிக்காட்டினார்.

அதற்குப் பெரியார் அவன் தன்னுடைய காலின் மீது கால் போட்டான் என்றார். அன்பர் வெட்கித் தலைகுனித்தார்.

## தெறிப்பு

“சாளரம் எழுச்சியின் சின்னமாகத் திகழவேண்டும்'' இதுவே எல்லோரது எதிர்பார்ப்பும் பேரவாவும். ஆனால், இருளில் - அடிமை இருளில் ஆதிக்க இருளில் - ஏட்டுக்கல்வி இருளில் - சிறை கொண்ட உத்தியோகச் சுயநல இருளில் - சிக்கிக் கிடக்கும் மாணவருக்காகத் திறக்கப்படும் சாளரத்தினூடாக உட்செல்லவேண்டியது சுதந்திர ஒளியேயன்றி வேறாக காற்றலையாக இருக்க முடியாது ……… எனவே காற்றலை என்ற பதத்தை விடுத்து ஒளி என்ற பதத்தைப் பாவிக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள்

வளவைவளவன்

*தங்கள் வேண்டுகோளை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்கிறோம்,*

---

*க. உதயமலர், கைதடி. காற்றலை - 3 ன் அனைத்து விடயங்களையும் பாராட்டியுள்ளார். வாமணன், சாரணன், றமணன் என்ற பெயர்கள் யாவும் ஒருவரது படைப்பாகத்தான் தெரிகிறது என ஊகம் தெரிவித்த இவர், தனியொருவரின் ஏகபோகமாக சாளரத்தை ஆக்குவதை தவிர்க்க ஆலோசனை கூறுகிறார். பூனையை எலிகள் எதிர்ப்பது யதார்த்தத்துக்குப் புறம்பான ஒரு நடைமுறை என்பதை ஏற்றுத்தான் மணியோசை மூலம் திசைமாற்றி விரட்டும் செம்பியனின் சிந்தனையில் ஏனிந்தக் குளறுபடி? என்றும் கேட்கிறார். சிறியோர் அம்சங்கள் இல்லாமை குறையாகத் தெரியவில்லையா? என்றும் கேட்டுள்ளார்.*

*சாளரத்தின் அபிலாசைகளுக்கு பொருந்தி வரக் கூடிய தரமான படைப்புக்களை பிரசுரிப்பதே எமது நோக்கம். யார் குற்றினாலும் பிரச்சினையில்லை அரிசி கிடைக்கட்டும். சிறியோர் அம்சங்கள் சேர்த்துக்கொள்ளல் பற்றி காலக்கிரமத்தில் கணக்கில் கொள்ளப்படும். செம்பியன் செல்வன் எழுதிய மீட்சி, உருவகக் கதைக்குப்பல பாராட்டுக் கடிதங்கள் வந்திருப்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறோம். இந்த வாசகர் குறிப்பிடும் 'குளறுபடி' என்பதை அவரின் வித்தியாசமான பார்வை, என வர்ணனை செய்து இச்கடிதங்கள் வந்துள்ளன.*

---

'சாளரம்' காற்றலை 3 ஐப் பாராட்டியுள்ள சு. ஸ்ரீகுமரன், சுன்னாகம். என் நெஞ்சத்தை நெகிழச் செய்தது. நிலா முற்றத்தில் காசியின் தீர்க்க தரிசனத்தை எடுத்துக் காட்டியதுதான் என்றும் கூறுகிறார்.

---

''படைப்பும் பார்வையும்'' என்ற சிறுகதை என்னை மிகவும் கவர்ந்தது. என்னைப் போன்ற சிறுவர்களுக்கு இது நல்ல படிப்பாக அமையும்.
சாளரம் தொடர்ந்து வெளிவர எனது மனம்நிறைந்த பாராட்டுக்கள்.

சி. குகரமணி
ஆண்டு 11 B
ஸ்ரீ சோமேஸ் இந்துக்கல்லூரி
புத்தூர்.

---

'சாளரம்' இதழ்கள் இழையோரின் பேராதரவைப் பெற்றுள்ளது. மேலும் சாளரம் முதல் இதழிலேயே பிரகடனப்படுத்தியபடி தூய தமிழிலேயே வெளிவருவேன் என்பதையும் நான் மகிழ்வுடன் வரவேற்கிறேன். ஒவ்வொரு இதழிலும் தூய தமிழ்ச் சொற்களை அறிமுகப்படுத்த ஒரு புதுப் பகுதியை ஆரம்பிக்க வேண்டுமென்ற வேண்டுதலை விட விரும்புகிறேன் புதுயுகம் தமிழ் சொல்லா என்பதை தெறிப்பு பகுதியின் மூலம் அறியவிரும்புகிறேன்.

K. P. கரன்
புலோலி தெற்கு, புலோலி.

*கலை - பண்பாட்டுக் கழகத்தினரின் ஆய்வுப்படி இன்று பயன்படுத்தும் 80 விழுக்காடு சொற்கள் பிறமொழிச் சொற்களேயாகும். எடுதத எடுப்பில் இதைச்சரிப்படுத்த முடியாது. ஆகவே எம்மால் முடிந்த வரையே நாம் முயற்சிப்போம். நீங்கள் கூறிய விடயம் தொடர்பான பகுதியை ஆரம்பிப்பது இன்று எம்மால் செய்யமுடியாததாகும்: காலப்போக்கில்யோசிப்போம் புதுயுகம் தமிழ் சொல்லல்ல.*

---

சாளரத்தில் வெளியாகும் கருத்துக்களையும், கட்டுரைகளையும் என்னால் வாசித்தறிய முடிகிறது. எனவே தவறாது மாதாமாதம் எமது பாடசலைக்கு அனுப்புமாறு வேண்டிக்கொள்கிறேன். சாளரத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சி. லதா
நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம்
மகளிர் பிரிவு

# அரும்புகள்

## விவசாயி

பார் வயல்களில்
மர - ஏர் உழுது
வியர்வை நீர் பாய்ச்சி
நெல் மணி விதை தூவி
நெற்பயிரை அறுவடை
செய்பவன் மட்டும்
விவசாயி அல்ல.

காகித வயல்களில்
பேனா ஏர் உழுது
மை நீர் பாய்ச்சி
கருத்து மணி விதை தூவி
கவிதைப் பயிர் அறுவடை
செய்பவனும் ஒரு
விவசாயி தான்.

பள்ளி வயல்களில்
மாணவ ஏர் உழுது
பண்பு நீர் பாய்ச்சி
கல்வி மணி விதை தூவி
அறிவுப் பயிரை அறுவடை
செய்பவனும் ஒரு
விவசாயி தான்.

— புவனா.

## தொலையவில்லை தொடர்கின்றன

சாலை ஓரத்திலும் சத்திரங்கள்
தொடர்கின்றன
மாடிக்கட்டிடங்கள் மண்ணின்மேல்
மடிகின்றன.
ஓலைக் குடிசைகளும் சுடர்விட்டு
எரிகின்றன.
அதில்
பாடம் படிக்கவா நாம்
இன்று ஆளானோம்.
புத்தகத்தை புரட்ட இங்கு
சூரியனும் இல்லையென்றால்
எரி குண்டு வெளிச்சமா
எம் நாட்டின் கல்விக்கு!
சித்தமதைக் கலக்கினாலும்
எம் சிந்தையினால் தேசமதை
கட்டி எழுப்பிடுவோம்
கட்டங்களால் மட்டுமல்ல
கற்ற கல்வியினாலும்!

—இ. செல்வதர்சினி
11- ம் - ஆண்டு
யாழ் நகர் கல்லூரி
— காரைநகர்—

## என் பேனா

அன்புத் துணை இது என் பேனா
ஆருயிர்த் தோழி என் பேனா
இணை பிரியாத என் பேனா
ஈடில்லா உதவி என் பேனா

உருவில் சிறியது என் பேனா
ஊக்கம் தந்திடும் என் பேனா
எண்ணத்தை கூறிடும் என் பேனா
ஏற்றதோர் கருவி என் பேனா
ஐயத்தைப் போக்கிடும் என் பேனா

ஒற்றுமை வளர்க்கும் என் பேனா
ஓய்வின்றி உழைக்கும் என் பேனா
ஔவையார் வழியில் என் பேனா
அஃதுதான் அறிவீர் என் பேனா

—இ.சுபத்திரா

## புத்தக ஜீவிகள்

இப்படி வா,
இதோ... இதை கூர்ந்துபடி
எங்கே. .
விடாமல் விடாமல்
தொடர்ந்து படி
என்ன ? ? ?
சமுதாயமா (?) செயற்திறனா (?)
எல்லாமே புத்தகத்தினுள்தான்
புதைந்து கிடக்கின்றன.
இந்தா.
இன்னும்... இன்னும்...
... ... ... ... ... ...
சுமையாக இருக்கிறதா?
பரவாயில்லை
மற்றவர்களிலும் நீ
உயர்ந்து தெரிய வேண்டாமா!

ஆராய்ச்சியா(?)
அதையும் இந்தப்
புத்தகங்களுக்குள்ளேயே
வைத்துக்கொள்.
பிறகென்ன
உன் பெயருக்குப் பின்னால்
அடை எழுத்துக்களுக்கு
நான்
உத்தரவாதம் செய்கின்றேன்.

—தேவகி ஐயம் பிள்ளை
வேம்படி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

வளரும் இளைய கவிஞர்களுக்கென இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிக நீளமான கவிதைகளை இப்பக்கத்தில் அடக்குவது கடினம். ஆகக்கூடியது பத்து வரிகளடங்கிய கவிதையாக எழுதி அனுப்பினால் மட்டுமே பிரசுரிக்கப்படும்.

# ஓவியம் வாக்கியம்



யார் இவர்...
உடல் ஊனமுற்ற மனிதனா?
அநாதையா? அகதியா?
பட்டினியால் வாடுபவரா?

கற்பனைக்கு கொஞ்சம் வேலை கொடுங்கள்

பொருத்தமான வரிகளை கவிதையாகவோ
வாக்கியமாகவோ எழுதியனுப்புங்கள்